வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk

மலர் : 03 | 28.11.2022 திங்கட்கிழமை | இதழ் : 355 | பக்கங்கள் : 16








# துயிலும் இல்லங்களில் திரண்டு மாவீரர்களுக்கு நேற்று அஞ்சலி

## ஈகச் சுடர்கள் ஏற்றி உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு வடக்கு-கிழக்கில் பேரெழுச்சியுடன் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், நவம்பர் 28

**தாயக விடுதலைக்காகத் தம் இன்னுயிரை ஈந்த வீரமறவர்களுக்கு - உயிர்க் கொடையாளர்களுக்குச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் தமிழர் தாயக மான வடக்கு - கிழக்கில் பேரெழுச்சியுடன் உணர்வுபூர்வாக நடைபெற்றன.**

வடக்கு-கிழக்கில் உள்ள அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்கள் மற்றும் பொது இடங்கள் நேற்று மாலை கண்ணீரால் நனைந்தன.

வடக்கு-கிழக்கில் மாவீரர் நாள் நிகழ்வுகளுக்குப் பொலிஸார், படையினர் மற்றும் புலனாய்வாளர்கள் தடைகளை ஏற்படுத்தியபோதும் மக்கள் இவற்றைக் கண்டு அஞ்சாமல் வீரமறவர்

15

## 4 இலட்சம் கிலோ பால்மா கொழும்பு துறைமுகத்தில்!

கொழும்பு, நவ. 28

நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட 04 இலட்சம் கிலோகிராம் பால் மா விடுவிக்கப்படாமல் கொழும்பு துறைமுகத்தில் தேங்கிக்கிடப்பதாக பால் மா இறக்கு மதியாளர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

அவற்றில் ஒரு இலட்சம் கிலோகிராம் பால் மா காலாவதியாகும் திகதியை அண்மித்துள்ள

15

## இவ்வருட இறுதிக்குள் உள்ளூராட்சி தேர்தல்!

### மகிந்த தேசப்பிரிய கூறுகிறார்

கொழும்பு, நவ. 28

உள்ளூராட்சித் தேர்தலை எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் காலம் தாழ்த்த முடியாது என்றும் இவ்வருட இறுதிக்குள் தேர்தல் தொடர்பான அறிவித்தலை தேர்தல் ஆணைக்குழு வெளியிடும் என்றும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

எல்லை நிர்ணய குழு, உள்ளூ

15

## ஜனாதிபதி ரணில், பஸிலுடன் ‘றோ’ தலைவர் திடீர் சந்திப்பு!



கொழும்பு, நவ. 28

இந்தியாவின் ‘றோ’ அமைப்பின் தலைவர் சமந் குமார் கோல் கடந்த திங்கட்கிழமை கொழும்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவையும்

15

## பழைய முறையில் தேர்தலை நடத்த பல கட்சிகள் இணக்கம்

கொழும்பு, நவ. 28

பழைய முறையிலேயே எதிர்வரும் தேர்தலை நடத்துவதற்கு பல கட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சு கூறியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அனைத்து அரசியல் கட்சிகளையும் அழைத்துக் கலந்துரையாடவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

(அ)

## உயிரிழந்த அன்புக்குரிய உறவுகளை நினைவு கூர முழு உரிமை உள்ளது!

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 28

“ஒவ்வொருவரும் தமது உயிரிழந்த அன்புக்குரிய உறவுகளை அமைதியாக நினைவு கூருவதற்கு முழு உரிமை உள்ளது. அதனை யாரும் தட்டிப்பறிக்க முடியாது” என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நவம்பர் 27ஆம் திகதி நினைவேந்தலைக் கடைப்பிடிப்பதற்கு வடக்கு-கிழக்கில் பகிரங்கமாக ஏற்பாடுகள் நடக்கின்றன. இதற்கு உங்கள் அரசு அனுமதி வழங்கியிருக்கின்றதா

15



## ரணில் ஹிட்லரா? சிரிக்கிறார் அனுர

கொழும்பு, நவ. 28

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் காற்சட்டையை இரண்டு பக்கங்களில் தூக்கிப் பிடித்துக்கொண்டு, தன்னை ஹிட்லர் எனக்கூறும்போது சிரிப்பு வருவதாகவும் ஹிட்லர் தனக்கு தானே சுட்டுக்கொண்டு இறந்து போனதாகவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

15

## இப்படியும் நடக்கிறது...!

அன்று மாலை பருத்தித்துறையில் உள்ள நண்பன் ஒருவனுக்கு தொலைபேசி எடுத்து இன்று இரவு உன் வீட்டுக்கு வந்துசெல்லலாம் என்று நினைக்கின்றேன் என்றேன்.

அவனுக்கும் நல்ல மகிழ்ச்சி. ‘மச்சான் வரேக்க ஒரு நல்ல கேக் ஒன்று வாங்கி வாறியா? நான் இதுக்காக யாழப்பாணம் வரவேண்டும் என்று நினைத்துக்கொண்டிருந்தேன்’ என்றான்.

‘அதுக்கென்ன வாங்கிவாறன். என்ன விசேசமடாப்பா?’ என்று கேட்டேன்.

‘மகன் ஒன்பது பாடத்திலையும் ஏ எடுத்திருக்கிறான். ஒரு ‘சேப்பிறைசாக’ அவனை மகிழ்விப்பம் எண்டிருக்கிறன்’ என்றான்.

எனக்கும் சந்தோசம். நாங்கள் போகின்றபோது அவனை மகிழ்விப்பது.

நானும் மனைவியுமாக, பருத்தித்துறை போகும்போது பேக்கறிக்கு சென்று அங்கிருந்த ஆகக்கூடியவிலையில் இருந்த கேக் ஒன்றை வாங்கிக் கொண்டு நண்பன் வீட்டுக்குப் போனோம்.

அன்று மாலை பொழுது போனதே தெரியவில்லை. கூடவே நண்பனுக்கும் எங்கள் முன்னிலையில் மகனை மகிழ்வித்தது இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருந்திருக்கும்.

எல்லாம் முடிந்து நாங்கள் வீடு திரும்ப ஆயத்தமாகியபோது, நாங்கள் வாங்கிச் சென்ற அந்த கேக் பெட்டியிலேயே மிச்சமாக இருந்த கேக்கை வைத்து ‘மிச்சமாகிவிட்டதை தருவதாக நினைக்காத மச்சான், வீட்டில அம்மா தங்கச்சிக்கு குடு’ என்று தந்தான்.

என் கவனம் எல்லாம் கேக் காசின் மேலேயே இருந்தது. கேக்குக்கு எவ்வளவு கொடுத்தாய் என்று கேட்டு காசை தருவான் என்று பார்த்தால், மிச்சமாக இருந்த கேக்கை தந்துவிட்டு அதைப்பற்றி அவன் கதைக்கவே இல்லையே என்ற ஆதங்கம். எப்படி கேட்பது என்ற தயக்கம் வேறு.

நாங்கள் வெளியேறுகின்றபோதாவது அவன் அதுபற்றி கேட்டு தருவான் என்ற எண்ணம் எனக்கு.

அவன் அதைப்பற்றி கதைக்கவே இல்லை.

எனக்கோ, அவன் மீது அளவுகடந்த கோபம். மனைவி சொன்னாள், ‘மறந்திருப்பார். பிறகு ஞாபகம் வந்ததும் கேட்டு தருவார்தானே?’.

வீடு போய்ச் சேரும்வரை அவனை திட்டிக்கொண்டே போனேன்.

வீட்டுக்கு போய்ச் சேர்ந்ததும், வீட்டில் இருந்தவர்களுக்கு கொடுப்பதற்காக கேக் பெட்டியைத் திறந்தபோது, உள்ளே மிகுதியாக இருந்த கேக் துண்டுடன், ஒரு என்வலப்பும் இருந்தது.

எடுத்து திறந்துபார்த்தால். ஐயாயிரம் ரூபா பணமும், சிறிய துண்டு காகிதமும் இருந்தது.

‘மச்சான், கேக் எவ்வளவு காசு என்று கேட்டிருந்தால் நீ சொல்லியிருக்க மாட்டாய். தயவு செய்து இதனை எடுத்துக்கொள். மகனுக்கு என் செலவில் கேக் வெட்டினேன் என்ற திருப்தி எனக்கு இருக்கவேண்டும்’.

இரண்டாயிரம் ரூபாவிற்குதான் கேக் வாங்கினோம். ஆனால் அவன் ஐயாயிரத்தை தந்திருக்கிறான்.

அவனைப் போய் இப்படி தவறாக எடைபோட்டுவிட்டேனே என்ற ஆதங்கம் எனக்கு.

நமது ஊகங்கள் எப்போதும் சரியாக இருந்துவிடுவதில்லை என்பதற்கு இது நல்ல உதாரணம்.

முகநூலில் படித்த இந்தக் கதைதான் அந்தச் செய்தியைப் படித்தபோது ஞாபகத்திற்கு வந்தது.

‘சமஷ்டி எனக்கூறி ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கே முயற்சி நடக்கின்றது. ஒற்றையாட்சிக்குள் முடக்கும் தீர்வை வலியுறுத்தும் தரப்புக்களை தமிழ்மக்கள் நிராகரிக்கவேண்டும்’ என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருப்பதாக வெளிவந்த செய்தியைப் படித்தபோதே அந்தக் கதை ஞாபகத்திற்கு வந்தது.

இனப்பிரச்னைக்கு தீர்வுகாணும் வகையில் அரசியல்கட்சிகளுடன் பேச்சுநடாத்தவிருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்ததைத் தொடர்ந்து, தமிழ் தேசியக் கட்சிகள் எல்லாவற்றையும் ஒன்றாக இணைத்து ஒரே கோரிக்கையை பேச்சுவார்த்தை மேசையில் முன்வைப்பதற்கான முயற்சியை கூட்டமைப்பு மேற்கொண்டிருக்கின்றது.

சம்பந்தனின் வீட்டில் கூடுமாறு சுமந்திரன் விடுத்த அழைப்பு கண்டுகொள்ளப்படாததால், மாவையிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. மாவையின் அழைப்பின்பேரில் நேற்று முன்தினம் கூட்டம் நடந்தது. ஆனால் அந்தக் கூட்டத்திற்கு தனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று கஜேந்திரகுமார் தெரிவித்தார். மாவையும் தான் அழைப்பு விடுத்ததாகக் கூறவில்லை. ஏன் என்பது அவருக்கு மாத்திரமே தெரிந்தது.

ஆனால், நடந்த அந்தக் கூட்டத்தில், மூன்று கோரிக்கைகளை முன்வைப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

அவற்றில் முக்கியமானது, இணைந்த வடக்கு - கிழக்கில் சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வையே தீர்வாக வலியுறுத்துவது எனவும், பின்னர் பேச்சின் நிலைமைகளுக்கு ஏற்ப விடயங்களை கலந்தாலோசித்து தீர்மானிப்பதற்கும் அந்தக் கூட்டத்தில் முடிவு எடுத்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகின.

இது தொடர்பாக கருத்தத் தெரிவித்தபோதே கஜேந்திரகுமார், ஒற்றையாட்சிக்கள் முடக்குவதற்கே முயற்சி நடக்கின்றது என்று தெரிவித்திருக்கிறார். பேச்சுவார்த்தை ஆரம்பிக்க முன்னரே அவர் ஊகம் வெளியிடுகின்றார். அவரது ஊகத்தை நம்பவேண்டும் என்றும் தமிழ் மக்களை கோருகின்றார்.

விடுதலைப் புலிகள், அரசாங்கத்துடன் நோர்வேயின் மத்தியஸ்தத்தின் கீழ் பேச்சுவார்த்தை நடத்தியபோது, தமிழ் ஈழம்தான் தமது கோரிக்கை என்று சொல்லிக்கொண்டாலும் பேச்சுவார்த்தை நடத்தியது அவருக்கு தெரியாமல் இருக்காது. நோர்வே தலைநகரில் அறிவிக்கப்பட்ட சமஷ்டித் தீர்வை அன்ரன் பாலசிங்கம் ஏற்றுக்கொள்ள வலியுறுத்தியபோதிலும் தலைமை அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் கூறப்படுவதுண்டு.

சிலவேளை அப்போது சமஷ்டியை ஏற்றுக்கொண்டிருந்தால், அதற்குப் பின்னரான நிகழ்வுகளை தவிர்த்திருக்கலாமோ என்னவோ?

அதுவல்ல, நாம் இன்று இங்கே சொல்ல வருவது, பேச்சுவார்த்தை தொடங்கவும் இல்லை, அதற்குள்ளாகவே இப்படித்தான் இருக்கப்போகின்றது என்று ஆரூடம் சொல்லுவது, கிளிச் சோதிடம் பார்த்துவிட்டு வாழ்க்கையை நடத்துவது போன்றது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

கேக் வாங்கச் சொன்ன நண்பன் காசு தரவில்லையே என்று அவனைப் பற்றி தவறான முடிவெடுத்ததுபோல ஊகங்களின் அடிப்படையில் அரசியல் செய்ய நினைத்தால், தமிழ் மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்.!

**- ஊர்க்குருவி**

# அரசுக்கு ஒரு நாளைக்கு 1,050 கோடி ரூபா கடன்!



கொழும்பு, நவ. 28

இலங்கை அரசாங்கம் தனது செயற்பாடுகளை நடத்துவதற்கு, சர்வதேசத்திடம் நாளொன்றுக்கு 1,050 கோடி ரூபா கடனை பெறவேண்டியுள்ள தாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்.

இந்த ஆண்டு அரசின் வருமானம் 653 கோடி என்றும், அரசின் செலவு 1,705 கோடி என்றும் பேராசிரியர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, வரவு-செலவுத் திட்ட ஆவணத்தின்படி அடுத்த ஆண்டு அரசாங்கத்தின் வருமானம் 950 கோடி ரூபாவாக இருக்கும் என தெரிவித்த பேராசிரியர் அத்துக்கோரள, அடுத்த வருடத்தில் அரசாங்கத்தின் செலவு 2,160 கோடி ரூபாவாக அதிகரிக்குமெனவும் கூறினார்.

வரி அதிகரிப்பால் அடுத்த ஆண்டு அரசின் வருமானம் அதிகரிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)



## வடக்கில் மழை பெய்யும் சாத்தியம்!

யாழ்ப்பாணம், நவ. 28

வடக்கு மாகாணத்தில் இடைக்கிடை மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஊவா, கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் ஒரு சில இடங்களில் மாலை அல்லது இரவு வேளையில்

மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் காலை வேளையில் பனி மூட்டம் நிலவும். (அ)

## முட்டை விலையை கணிக்க ஒரு வாரம் கால அவகாசம்!

கொழும்பு, நவ. 28

கோழி முட்டையொன்றை விற்பனைசெய்யக்கூடிய விலையை ஒரு வாரத்தில் கணக்கிட்டு வழங்குமாறு நிதி மற்றும் வர்த்தக அமைச்சுக்கு அரசாங்க நிதி பற்றிய குழு உத்தரவிட்டுள்ளது.

நேற்று முன்தினம் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற கூட்டத்தில் அந்தக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

கோழித் தீவனத்தை இலங்கைக்கு இறக்குமதி செய்வது தொடர்பான ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை கருத்திற் கொண்டு இந்த விலையை கணக்கிடுமாறு அவர் தெரிவித்துள்ளார். (அ)

## வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் டொலர் உயர்வு

கொழும்பு, நவ. 28

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் ஒக்ரோபர் மாதத்தில் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் அனுப்பிய பணத்தின் அளவு அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் மூலமாக 317.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ள துடன் இந்த வருடம் ஒக்ரோ பர் மாதத்தில் 355.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளன. (அ)

## பண்டிகை காலத்தில் உணவுப் பொருட்கள் விலைகள் தவிர்க்க முடியாதவாறு உயரும்!

கொழும்பு, நவ. 28

பண்டிகைக் காலத்தில் உணவு பொருட்களின் விலைகள் தவிர்க்க முடியாமல் உயரும் என அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதியாளர் சங்கத்தின் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித் தார்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதிக்காக வங்கிகள் டொலர்களை விடுவிக்காவிட்டால், இந்த நிலைமை ஏற்படும் என அவர் குறிப்பிட்டார்.

உருளைக்கிழங்கு, வெங்காயம், பருப்பு, உலர் பழங்கள் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை, அவற்றை இறக்குமதி செய்யும் நாடுகளின் விற்பனை விலையைப் பொருத்து நிர்ணயிக்கப்படுகிறது.

அவற்றில் சிலவற்றின் உற்பத்தி குறைந்ததால், அந்நாடுகளில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பண்டிகைக் காலங்களில் இந்த உணவுப் பொருட்களின் தேவை அதிகரிப்பதன் காரணமாக விலைகள் பாரிய அளவில் உயரும்.

நாட்டில் தற்போதுள்ள இறக்குமதி வரிகள் மற்றும் தீர்வை வரிகளும் உணவுப் பொருட்களின் விலையில் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும், அவற்றின் வரிகள் அதிகரிக்கப்பட்டால், அதுவும் விலை அதிகரிப்புக்கு வழி வகுக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்திடம் நிலையான வரிக் கொள்கை இல்லை எனவும், அவ்வப்போது வர்த்தமானி மூலம் வரி திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதால் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான நிலையான விலையை நிலைநிறுத்துவது கடினம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2022**

“மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடிகொள்ளச் செய்யும் ஒன்றாகும்.”

*ஸ்டேர்லிங் மோர்ட்டன் (அமெரிக்க அரசியலாளர்)*

ஈழநாடு
Eelanadu
28.11.2022 திங்கட்கிழமை

பிலவ வருடம், கார்த்திகை 12

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சமஷ்டியை அடையும் வழியென்ன?

பாராளுமன்ற உறுப்பினர் விக்கினேஸ்வரன் சமஷ்டித் தீர்வின் மூலம் மட்டுமே தமிழர்கள் சுதந்திரமாக வாழமுடியுமென்று தெரிவித்திருக்கின்றார். சமஷ்டித் தீர்வு தமிழ் மக்களுக்கு தேவையென்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் அதனை எவ்வாறு அடைவதென்னும் கேள்விக்கு எவரிடமும் பதிலில்லை. இந்த நிலையில் வெறுமனே சமஷ்டியை உச்சரித்துக் கொண்டிருப்பதன் மூலம் மட்டும் பிரச்னைளை தீர்க்க முடியுமா? தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் என்போரின் சமஷ்டிக் கதையை, கற்பனாவாத இடதுசாரிகளின் சோசலிசக் கதையோடு ஒப்பிடலாம். சோசலிசம் மலர்ந்தால் அனைத்து பிரச்னைகளும் தீர்ந்துவிடுமென்று கூறுவது போல்தான், சமஷ்டியை அடைந்தால் அனைத்து பிரச்னைகளும் தீர்ந்துவிடுமென்று கூறுவதுமாகும். ஆனால் அதனை அடையும் வரையில் பிரச்னைகளுக்கான தீர்வென்ன?

தமிழர்களின் சமஷ்டிக் கோரிக்கை புதியதல்ல. சமஷ்டி கட்சிதான், தமிழரசுக் கட்சியின் ஆங்கிலப் பெயராகும். ஆனாலும் கூட, சமஷ்டியை ஒரு பாய்ச்சலில் அடைந்துவிட முடியுமென்று தமிழரசுக் கட்சியை உருவாக்கிய, எஸ்.ஜே.வி. செல்வநாயகம் ஒருபோதுமே நம்பியதில்லை. அவரது அரசியல் அணுகுமுறைகளே இதற்கு சான்றாகும். தென்னிலங்கைக்கு சமஷ்டிக் கட்சியின் தலைவராக தன்னை முன்னிலைப்படுத்தியிருந்த செல்வநாயகம், ஒற்றையாட்சிக்குட்பட்ட அரசியல் ஏற்பாடுகளையே கோரினார். பண்டா-செல்வா மற்றும் டட்லி-செல்வா உடன்பாடுகள் ஒற்றையாட்சிக்குட்பட்டதுதான். ஆனால் அந்த கோரிக்கைகளை தென்னிலங்கை உதாசீனம் செய்த காரணத்தினால்தான், செல்வநாயகம் தனிநாட்டு கோரிக்கை நோக்கிச் சிந்திக்க முற்பட்டார். ஆனால் அப்போதும் கூட அவரிடம் எந்தவொரு திட்டமும் இருந்திருக்கவில்லை. செல்வநாயகத்திற்கு பின்னர் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்ட அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து செயற்படவில்லை. இதிலிருந்து, தமிழ் மிதவாதிகளிடம் தாங்கள் கூறுவதை அடைவதற்கு அன்றும் எந்தவொரு திட்டமும் இருந்ததில்லை. இன்றும் எந்தவொரு திட்டமும் இல்லை. இன்றும் சமஷ்டியை உச்சரித்துக் கொண்டிருப்பவர்களிடம் அதனை அடைவதற்கான எந்தவொரு திட்டமும் இல்லை.

அரசியல்வாதிகள் சமஷ்டியை உச்சரித்துக் கொண்டிருக்கும்போது, சாதாரண மக்களோ, நாட்டைவிட்டு வெளியேறுவதை பற்றியே சிந்திக்கின்றனர். இதுவே இன்று தமிழ் மக்களின் பொதுவான மனநிலையாக இருக்கின்றது. இதனை பற்றி எந்தவொரு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவராவது சிந்திக்கின்றாரா? மக்கள் தொடர்ந்தும் வெளியேறினால் அதன் பின்னர் தாயகம் என்பதன் பொருள் என்ன? தமிழ் மக்கள் மீண்டும் ஏமாற்றுப்பட்டுவிடக்கூடாதென்று சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறுகின்றார். உண்மையில் தமிழ் மக்களை வேறு எவரும் ஏமாற்றவில்லை. மாறாக, தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் என்போரின் வினைத்திறனற்ற, தந்திரோபாயமற்ற, ஆளுமையற்ற செயற்பாடுகளினால்தான், தமிழ் மக்களுக்கு தொடர்ந்தும் ஏமாற்றமே மிஞ்சுகின்றது.

இலங்கைத் தீவு பிரித்தானிய காலனித்துவ நிர்வாகத்தின் கீழிருந்த காலத்தில், சமஷ்டி ஏற்பாட்டை அடைவதற்கான வாய்ப்பிருந்தது. கொழும்பு மேட்டுக்குடித்தன அரசியலால் அந்த வாய்ப்பு இல்லாமல் போனது. அதன் பின்னர் சமஷ்டியை பெறுவதற்கானதொரு வாய்ப்பு பிரபாகரன் தலைமையில் மட்டுமேயிருந்தது. 2009 இற்கு பின்னரான அதாவது, போர் தோல்விக்கு பின்னரான சூழல் முற்றிலும் மாறுபட்டது. தமிழர்கள் பலமற்றிருக்கின்ற நிலையில், சமஷ்டியை மட்டும் முன்னிலைப்படுத்தி செயலாற்ற முடியாது. இந்த நிலையில் படிப்படியாக செல்வதற்கான தந்திரோபாயங்கள் தொடர்பில்தான் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் என்போர் சிந்திக்கவேண்டும். அதற்குத்தான் இந்தியாவின் ஆதரவுமுண்டு. இல்லாவிட்டால், தென்னிலங்கையின் அனைத்து பிரதான கட்சிகளும் ஒற்றையாட்சியை நீக்குவதற்கு இணங்க வேண்டும். இணங்கினால் மட்டும் போதாது, அதனை சிங்கள் மக்கள் மத்தியில் கொண்டு சென்று, அவர்களை ஏற்றுக்கொள்ளச் செய்யவேண்டும். பௌத்த மகாசங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அண்மையில் கஜேந்திரகுமார் ஒரு கருத்தை வெளியிட்டிருந்தார். அதாவது, ஒற்றையாட்சியை இல்லாதொழித்து, சமஸ்டிமுறைமையை ஏற்படுத்துவதற்கு தான் தயாரென்று, அனைத்து மக்களிடமும் ரணில் வலியுறுத்த வேண்டுமென்று தெரிவித்திருந்தார். ரணில் அவ்வாறு தெரிவித்தாலும்கூட, எதுவும் நடந்துவிடப் போவதில்லை. ரணில் அடுத்த தேர்தலை மறப்பதைதவிர வேறு ஏதுவும் நடக்காது. ஏனெனில் இது ஒரு ரணில் விக்கிரசிங்க தொடர்பான பிரச்னையில்லை.

இதற்கு மாறானதொரு நிலைமையிருகின்றதென்றால் ஒரு மூன்றாம் தரப்பின் இராணுவத் தலையீடு நிகழவேண்டும். அதற்கு வாய்ப்புண்டா? நிச்சயம் இல்லை. இந்த பின்புலத்தில் நோக்கினால் தற்போதுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழுள்ள மாகாண சபை முறைமையே இந்தியாவின் இராணுவத் தலையீட்டினால்தான் நிகழ்ந்தது. 13 இற்கே இராணுவத் தலையீடு தேவை யென்னும் நிலைமையிருக்கும்போது, முன்னைய இராணுவத் தலையீட்டை விடவும், கடுமையானதொரு இராணுவத் தலையீடல்லவா ஒற்றையாட்சியை நீக்கி, சமஷ்டியை அடைவதற்கு தேவை? இந்த விடயங்கள் விக்கினேஸ்வரன் போன்றவர்களுக்கு புரிகின்றதா? இருப்பதை பாதுகாத்துக் கொண்டு முன்நோக்கி பயணம் செய்யும் தந்திரம் பழக வேண்டும். தந்திரம் பழக முடியாவிட்டால், பாராளுமன்ற கதிரையாசையை புறம்தள்ளி, ஆற்றலுள்ளவர்களுக்கு வழிவிட வேண்டும்.

# கோட்டாவை தவறாக நடத்துவோர் இன்னமும் அவரைச் சூழ்ந்துள்ளனர்

## கூறுகிறார் உதயங்க வீரதுங்க



கொழும்பு, நவ. 28

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை தவறாக வழிநடத்துபவர்கள் இன்னமும் சூழ்ந்துள்ளார்கள் என்று ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோட்டாபய ராஜபக்ஷவை சூழ்ந்திருந்தவர்கள் தவறாக வழி காண்பித்தாலேயே அவர் பதவியைத் துறக்க வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டன.

தற்போது அவ்வாறானவர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைவடைந்துள்ளபோதும் இன்னமும் அவரைச் சூழ்ந்து கொண்டு வெவ்வேறு கதைகளைக் கூறிக்கொண்டு இருக்கின்றார்கள். அவர்களில் சிலர் தமது எதிர்காலத்துக்காக மீண்டும் அவரை அரசியலுக்குள் அழைத்து வரவும் விரும்புகின்றார்கள்.

ஆனால் அவர் அரசியல்வாதியாக தோல்வி கண்டுவிட்டார். அதனால் அவரால் முழுமையான அரசியல்வாதியாக எதிர்காலத்தில் செயற்படுவார் என்று கூற முடியாது. அதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவாகவே உள்ளன.

இருப்பினும் அவரைச் சூழ்ந்துள்ளவர்கள், தற்போதும் முக்கிய பதவிகளில் உள்ளவர்களைப் பாதுகாப்பதற்கு தலையீடுகளைச் செய்வதற்கு பயன்படுத்துகின்றார்கள். ஆகவே, கோட்டாபய முதலில் தன்னைத் தவறாக வழிநடத்திய அணியிடமிருந்து விடுபட்டு வெளியேற வேண்டும். அவ்வாறு வெளியேறுவதன் ஊடாகவே அவர் தற்போது முகங்கொடுக்கும் நெருக்கடிகளைத் தவிர்க்க முடியும்- என்றார். (அ)

# மருந்துகள் தட்டுப்பாட்டுக்கு டிசெம்பருக்குள் முற்றுப்புள்ளி

கொழும்பு, நவ. 28

டிசெம்பர் மாத இறுதிக்குள் இந்நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்துப் பற்றாக் குறைக்கு ஓரளவு தீர்வை வழங்கமுடியும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

வெளிநாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து இந்நாட்டுக்கு தேவையான மருந்துகளை இறக்குமதி செய்யும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதன்படி மருந்துப் பற்றாக்குறையை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர முடியும் என அமைச்சர் கூறினார்.

எவ்வாறாயினும், அத்தியாவசிய உயிர் காக்கும் மருந்துகளுக்கு தட்டுப்பாடு இல்லை என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேலும் குறிப்பிட்டார். (அ)

# சிறைச்சாலைகளில் 2 மடங்கு கைதிகள்!

கொழும்பு, நவ. 28

நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் அதிகபட்சமாக 13,200 கைதிகளை அடைத்து வைக்க முடியும் என்றபோதிலும், நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகள் தற்போது அதிகபட்ச கொள்ளளவை விட இரு மடங்கு கைதிகள் அடைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சில சிறைச்சாலைகள் அதன் கொள்ளளவை 300 வீதத்தை தாண்டியுள்ளதாக சிறைச்சாலைகள் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

திணைக்களத்தின் புள்ளி விவரங்களின்படி, நவம்பர் 25 ஆம் திகதி வரை நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் 26,000 க்கும் மேற்பட்ட கைதிகள் பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.


கடந்த ஆண்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 74 வீதம் பேர் போதைப் பொருள் தொடர்பான குற்றங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் என்று பேச்சாளர் கூறினார்.

தற்போது, போதைப் பொருள் தொடர்பான குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை 4,600. அதே சமயம் அதே குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபர்களின் எண்ணிக்கை 8,700 ஆகும்.

சிறைச்சாலையில் உள்ள பெரும்பாலான கைதிகள், 62 வீதம் சந்தேகநபர்கள் என்று ஏக்கநாயக்க கூறினார்.

தரவுகளின்படி, போதைப் பொருள் தொடர்பான குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் மற்றும் சந்தேக நபர்களின் எண்ணிக்கை மொத்த கைதிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 50 வீதத்தை தாண்டியுள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

முயற்சி வெற்றியாகும். வருமானம் அதிகரிக்கும். நினைத்ததை நிறைவேற்றி மகிழ்வீர்கள். நிதி நிலைமையில் இருந்த நெருக்கடிகள் விலகும். நீங்கள் ஈடுபடும் செயலில் ஆதாயம் காண்பீர்கள்.

**இடபம்**

யோசித்து செயல்படவும். உங்கள் முயற்சியில் இன்று பின்னடைவுகள் ஏற்படும். எதிர்பார்த்த ஒன்று இழுபறியாகும்.செயல்களில் கவனம் தேவை. மற்றவரால் சில சங்கடங்களை நீங்கள் சந்திக்க நேரும்.

**மிதுனம்**

குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நண்பர்களின் உதவியால் ஒரு எண்ணம் நிறைவேறும்.நீங்கள் விரும்பும் வகையில் செயல்பட்டு லாபம் காண்பீர்கள். தம்பதி இடையே ஒற்றுமை உண்டாகும்.

**கடகம்**

இழுபறியாக இருந்த ஒரு செயலில், இன்று உங்களுக்கு சாதகமான நிலை உண்டாகும்.முயற்சியில் வெற்றி அடைவீர்கள். மகிழ்ச்சி கூடும். உங்களை எதிர்த்து செயல்பட்டவர்கள் உங்களிடம் சரண் அடைவார்கள்.

**சிம்மம்**

முயற்சிகள் வெற்றியாகும். செல்வாக்கு வெளிப்படும். மற்றவர்களால் சாதிக்க முடியாத ஒன்றை சாதிப்பீர்கள். பெற்றோரின் ஆலோசனை நன்மை தரும். குடும்பத்தினர் நலனில் அக்கறை செலுத்துவீர்கள்.

**கன்னி**

உங்கள் மனம் காட்டும் வழியில் செல்வீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும். விரும்பிய வகையில் செயல்பட்டு மகிழ்வீர்கள்.நீண்டநாள் விருப்பம் ஒன்று நிறைவேறும். எதிர்பாராத வரவுகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்**

மகிழ்ச்சி கூடும்.நெருக்கடிகள் இருந்தாலும் நினைத்ததை சாதிப்பீர்கள். உங்கள் முயற்சி வெற்றியாகும். துணிச்சலுடன் செயல்படுவீர்கள். உங்கள் எதிர்பார்ப்புகள் இன்று எளிதாக நிறைவேறும்.

**விருட்சிகம்**

சேமிப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் திட்டமிட்டு செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு உயரும்.புதிய வேலைக்காக எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். திருமணப்பேச்சு எழும்.

**தனுசு**

உங்கள் மனம் ஒரு நிலையில் இல்லாமல் போகும். செயல்களில் தடுமாற்றம் உண்டாகும். செயலில் நீங்கள் எதிர்பார்த்த நன்மையை அடைய முடியாமல் போகும். எதிர்பார்ப்பு இழுபறியாகும்.

**மகரம்**

எதிர்பாராத செலவால் சங்கடப்படுவீர்கள். உங்கள் செல்வாக்கை வெளிக்காட்டுவதற்காக செலவுகள் செய்வீர்கள். வெளியூர் பயணம் ஆதாயமாகும். நெருக்கடிகள் ஏற்பட்டாலும் உங்கள் விருப்பம் நிறைவேறும்.

**கும்பம்**

நிதி நிலை உயரும்.பழைய முதலீட்டில் இருந்து லாபம் வந்து சேரும். பொன் பொருள் சேர்க்கையில் கவனம் செல்லும். நண்பர்களின் ஒத்துழைப்பால் உங்கள் முயற்சி ஒன்று வெற்றியாகும்.

**மீனம்**

குடும்பத்தினரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள். பிரச்சனை ஒன்று முடிவிற்கு வரும்.வியாபார ரத்தை விரிவு செய்ய திட்டமிடுவீர்கள். எதிர்பார்த்த ஆதாயத்தை அடைவீர்கள். சிலர் வெளியூர் பயணம் செல்வீர்கள்.

# தமிழீழம் அமைக்கும் நடவடிக்கையை இந்திய அரசு மேற்கொள்ளவேண்டும்!

## ராமதாஸ் கோரிக்கை

சென்னை, நவ. 28

தமிழீழம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்ள வேண்டும் என்று பா.ம.க நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

பாமக நிறுவனர் ராமதாஸ் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்-

தமிழர்களுக்கென ஒரு தனி நாடாக தமிழீழம் அமைக்கும் முயற்சியில் இன்னுயிர் ஈந்த ஈழப்போராளிகளின் தியாகத்தை போற்றும் வகையில் நவம்பர் 27 ஆம் நாள் மாவீரர் நாளாக கடைபிடிக்கப்படுகிறது. இந்த நாளில் ஈழ விடுதலைக்காக உயிர்த்தியாகம் செய்த போராளிகளுக்கு வீரவணக்கம் செலுத்துவோம்.

இலங்கையின் களச்சூழல் மாறியிருக்கலாம். ஆனால், தனித்தமிழ் ஈழத்திற்கான தேவை அப்படியே தான் இருக்கிறது. அது தான் இலங்கை இனச் சிக்கலுக்கு தீர்வும் கூட. உலகெங்கும் வாழும் ஈழத்தமிழர்களின் கனவும், தாகமும் கூட தனித்தமிழ் ஈழம் அமைக்கப்படவேண்டும் என்பது தான்.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் மாறி வரும் சூழலும், அதிகரித்து வரும் சீனாவின் ஆதிக்கமும் தமிழீழம் குறித்த இந்தியாவின் நிலைப்பாட்டை மாற்றி அமைப்பதற்கான காரணிகளாக உருவெடுத்து வருகின்றன. தனித்தமிழீழம் அமைக்கப்படுவது தான் இந்தியாவின் பாதுகாப்புக்கு வலு சேர்க்கும்.

ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் தங்களின் நாட்டை தீர்மானிக்கும் உரிமை உண்டு. அதன்படி ஐ.நா. மூலம் உலகெங்கும் உள்ள ஈழத் தமிழர்களிடம் பொதுவாக்கெடுப்பு நடத்தி அதனடிப்படையில் தமிழீழம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்ள வேண்டும்- என்று கூறியுள்ளார். (அ)

# ஸ்டாலின் பொம்மை முதல்வர் என்பது முற்றிலும் உண்மையே!

சென்னை, நவ. 28

புள்ளி விவரங்களை அப்படியே வாசிக்கின்ற ஒரு பொம்மை முதல்வராக ஸ்டாலின் இருக்கிறார் என்று எடப்பாடியார் சொல்லுவது உண்மையிலும் உண்மை என்பது நிருபணம் ஆகியுள்ளது என அ.தி.மு.க முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் கூறியுள்ளார்.

இது தொடர்பாக பேசிய அவர்-

முதலமைச்சர் பக்க பக்கமாக வெளியிடும் புள்ளி விவரங்கள் அறிவிப்புகள் தவறாக வெளியிடப்படுகிறது என்பதை தொடர்ந்து எடப்பாடியார் தொடர்ந்து இந்த அரசை சுட்டிக்காட்டி குறைகளை எடுத்துக்காட்டி அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்.

இன்றைக்கு முதலமைச்சர் இந்த நாட்டு மக்களுக்கு உண்மையை எடுத்துச் சொல்வதற்கு தயாராக இல்லை.

இதைத்தான் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடியார இந்த அரசு உண்மையை மறைத்து முழு பூசணிக்காய் சோற்றில் மறைத்து நாங்கள் செயல்படுத்தி திட்டங்களை மட்டுமே அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள் தவிர, புதிய திட்டங்களை அவர்கள் எதுவும் கொடுக்கவில்லை என்று ஒவ்வொரு நாளும் இன்றைக்கு இந்த அரசுக்கு தொடர்ந்து நினைவூட்டல் செய்து வருகிறார். எழுப்ப முடியாது இன்றைக்கு தூங்குகிறவரை எழுப்பலாம்.ஆனால் தூங்குவதைப் போல நடிப்பவர்களை எழுப்ப முடியாது என்கிற அந்த அடிப்படையிலே, இந்த அரசு தூங்குவதைப் போல நடித்துக் கொண்டிருக்கிறது, ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் ஒவ்வொரு நாளும் அறிக்கை கொடுத்து இன்றைக்கு இந்த அரசுக்கு எச்சரிக்கை விடுத்தாலும் கூட ஆனால் இந்த அரசு தூங்குவதை போல் நடித்துக் கொண்டிருக்கிறது. மிக விரைவிலே இந்த நாட்டு மக்கள் இந்த தூங்குவதைப் போல நடித்துக் கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு தக்க பாடம் புகட்டுகிற நாள் வெகு தொலைவில் இல்லை. பொம்மை முதல்வராக ஸ்டாலின் அரசு இதுபோன்ற தவறான புள்ளி விவரங்களை வெளியிட்டு பயனாளிகளுடைய மனதை புண்படுத்தாமல் வேதனையைச் செய்யாமல் இருக்க வேண்டும். இன்றைக்கு முதலமைச்சருக்கு கொடுக்கப்படுகிற புள்ளி விவரங்கள் அதை அப்படியே அவர் வாசிக்கின்ற ஒரு பொம்மை முதல்வராக ஸ்டாலின் இருக்கிறார் என்று எடப்பாடியார் சொல்லுவது உண்மையிலும் உண்மை என்பது ஆகியுள்ளது-என்று கூறினார். (அ)

# பா.ஜ.,வுக்கு எதிராக கமலை களமிறக்கத் தி.மு.க. திட்டம்

சென்னை, நவ. 28

வரும் லோக்சபா தேர்தலில், மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமலை, பா.ஜ., போட்டியிடும் தென் சென்னை அல்லது கோவையில் களமிறக்க, தி.மு.க., திட்டமிட்டு இருப்பதாக, தகவல் வெளியாகியுள்ளது.

ஜெயலலிதா மறைவுக்குப் பின், 2018 பெப்ரவரியில், மக்கள் நீதி மய்யம் என்ற அரசியல் கட்சியை, நடிகர் கமல் தொடங்கினார். 2019 லோக்சபா தேர்தலில் முதன்முறையாக களமிறங்கிய மக்கள் நீதி மய்யம், 2.64 சதவீத வாக்குகளை பெற்றது.

கடந்த 2021 சட்டசபை தேர்தலில் சிறிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்ட கமல் கட்சி, 2.62 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றது. கோவை தெற்கு தொகுதியில் போட்டியிட்ட கமல், பா.ஜ., வேட்பாளர் வானதியிடம் தோல்வி அடைந்தார்.

போட்டியிட்ட இரு தேர்தல்களிலும் தனித்து 3 சதவீதத்தை கூட தாண்ட முடியாததால், 2024 லோக்சபா தேர்தலில், தி.மு.க., கூட்டணியில் இணைய, கமல் திட்டமிட்டுள்ளதாக, அக்கட்சியினர் தெரிவிக்கின்றனர்.

அதனால்தான், 2021 சட்டசபை தேர்தலுக்கு பின், தி.மு.க.,வுடன் கமல் நெருக்கம் காட்டி வருவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

கூட்டணியில் இணைவதால் கமலுக்கு, தென் சென்னை அல்லது கோவை தொகுதியை வழங்க, தி.மு.க., திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. கமலை நிறுத்தினால், இந்த இரு தொகுதிகளிலும் பா.ஜ.,வை வீழ்த்தலாம் என, தி.மு.க. கருதுவதாக தெரிகிறது.

கோவையில் தமிழக பா.ஜ., தலைவர் அண்ணாமலை போட்டியிட வாய்ப்புள்ளது. தென் சென்னையில் போட்டியிட பா.ஜ.,வுக்குள் கடும் போட்டி நிலவுகிறது.

மீண்டும் அரசியலுக்கு திரும்ப விரும்பும் தெலுங்கானா கவர்னர் தமிழிசை, தென் சென்னையில் போட்டியிடும் விருப்பத்தை, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவிடம் கூறியுள்ளதாக தெரிகிறது.

சட்டசபை தேர்தலில் கோவையில் தோற்றதால், லோக்சபா தேர்தலில் தென் சென்னையில் போட்டியிட விரும்புவதாக, முதல்வர் ஸ்டாலினிடம் கமல் கூறியிருப்பதாக, ஆளுங் கட்சி வட்டாரத்தில் கூறப்படுகிறது. (அ)

# சமஷ்டி தீர்வை விடுத்து வேறு எதுவும் வேண்டாம்

## சட்டத்தரணி சுகாஷ் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், நவ. 28

ஜனாதிபதி சர்வதேச ஆதரவைப் பெறுவதற்காகவும் பொருளாதார ரீதியாகச் சீர் குலைந்திருக்கின்ற நாட்டைக் காப்பாற்றுவதற்காகவும் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வைக் காண்பதுபோல ஒரு நாடகத்தை ஆடுவதற்கு முற் படுகின்றார். இந்த நேரத்தில் தமிழ்க் கட்சிகள் மிகவும் அவ தானத்துடனும், சாதுரியத்து டனும், சாணக்கியத்துடனும்



நடந்துகொள்ள வேண்டும் என்பது தான் எங்கள் நிலைப் பாடு எனத் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் சட்டத்தரணி யுமான கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வட்டுக்கோட்டை அலுவல கத்தில் மாவீரர்களின் பெற் றோரை கௌரவிக்கும் நிகழ் வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். (அ)

# பாகிஸ்தானுக்கு வடக்கு மக்கள் மீது திடீர் கரிசனை வரக்காரணம் என்ன?

## சிவசக்தி ஆனந்தன் கேள்வி

வவுனியா, நவ. 28

பாகிஸ்தான் தூதுவர், வடக்கில் உள்ள தமிழ் மக்கள் மீது திடீரென கரிசனை காட் டுவதற்கு காரணம் என்ன என ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாகிஸ்தான் தூதுவரின் வடக்குக்கான மூன்று நாட்கள் திடீர் பயணம் பல்வேறு திரைமறைவு நிகழ்ச்சி நிரல்க ளைக் கொண்டிருக்கலாம் என்றும் சிவசக்தி ஆனந்தன் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக, வடக்கு மாகா ணத்தை மையப்படுத்தி இராஜ தந்திர முரண்பாடுகளை ஏற்ப டுத்தும் நடவடிக்கைகளை ஆரம் பிக்க அவர் முனைகின்றாரா



என்றும் சிவசக்தி ஆனந்தன் கேள்வியெழுப்பியுள்ளார்.

தமிழ் மக்கள் மீது கரிசனை கொள்பவராக பாகிஸ்தான் தூது வர் இருந்திருந்தால் அந்த மக்க ளுக்காக ஐ.நாவில் இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களித்திருக்க கூடாது என்றும் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு யுத்தத்தின் போது இலங்கை இராணு வத்திற்கு ஆயுதங்களை பாரியளவில் வழங்கி கண் மூடித்தனமான- அப்பட்ட மான மனித உரி மைகளை மீறிய போருக்கு பாகிஸ்தான் காரணமாக இருந்தி ருக்க கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு தமிழ் மக்க ளுக்கு எதிரான அனைத்துச் செயற்பாடுகளையும் முன்னெ டுத்த பின்னர் வடக்கு மக்கள் மீது கரிசனை கொள்வது வேடிக்கையான விடயம் என் றும் சிவசக்தி ஆனந்தன் கூறி னார். (அ)



# கப்டன் பண்டிதரின் வீட்டில் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், நவ. 28

தமிழீழ விடுதலைப் புலிக ளின் மாவீரர் கப்டன் பண்டித ரின் இல்லத்தில் நேற்று மாவீ ரர் தின நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

வல்வெட்டித்துறையில் உள்ள கப்டன் பண்டிதரின் இல்லத்தில் நேற்று மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் பண்டிதரின் தாயாரால் பண்டிதரின் திருவு ருவப்படத்திற்கு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (அ)

# ஜனவரி மாதத்துக்குள் தடையின்றி மின்சாரம்

கொழும்பு, நவ. 28

அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்துக்குள் நாட்டு மக்க ளுக்கு தடையின்றி மின்சா ரத்தை வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளை யும் எடுப்பதாக மின்சக்தி மற் றும் எரிசக்தி அமைச்சர் காஞ் சன விஜேசேகர தெரிவித்தார்.

நேற்று முன் தினம் சனிக் கிழமை தினசரி மின்வெட்டு கள் தொடர்பான தகவல்களை தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

பெப்ரவரி மாதம் முதல் இலங்கை மக்கள் தினசரி மின் வெட்டுகளை அனுபவித்து வருகின்றனர். அது ஒரு கட் டத்தில் மின்வெட்டு 13 மணி நேரமாக நீடித்தது. இப்போது ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரமாக குறைந்துள்ளது.

எவ்வாறாயினும் மின்சாரக் கட்டணத்தை திருத்தியமைக் காமல் அதனைச் செய்யமுடி யாது. ஒவ்வொரு வருடமும் ஜனவரி மற்றும் ஜூன் மாதங்க ளில் மின்சாரக் கட்டணத்தை மீள்திருத்தம் செய்ய வேண் டும்- என்றார். (அ)

# முல்லைத்தீவு வர்த்தக நிலையங்கள் மாவீரர் தினத்தை முன்னிட்டு பூட்டு


முல்லைத்தீவு, நவ. 28

மாவீரர் தினத்தை முன்னிட்டு நேற்று முல்லைத்தீவு நகரப் பகுதியில் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டன.

தமிழர் பிரதேசங்களில் பாதுகாப்புத் தரப்பினரின் கெடுபிடிகளுக்கு மத்தியில் நேற்று மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

முல்லைத்தீவு மற்றும் புதுக்குடியி ருப்பு வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலை யங்களை மூடி ஒவ்வொரு வருடமும் மாவீரர்களுக்கு மரியாதை செலுத்தி வருகின்றனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாவீரர்க ளை நினைவுகூரும் வகையில் முல்லைத் தீவு நகர வர்த்தக நிலையங்கள் அனைத்




தும் மூடப்பட்டன. (அ)

# பெரிய வெங்காயத்தின் விலை மேலும் குறையும்!

கொழும்பு, நவ. 28

விசேட பண்ட வரி வீதத்தை குறைக்க உணவு கொள்கை குழு பரிந்துரைத்துள்ளதால் சந்தையில் பெரிய வெங்காயத் தின் விலை மேலும் குறையும் என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

உள்நாட்டில் வெங்காயத் திற்கான தேவை வருடத்துக்கு சுமார் 300,000 மெற்றிக் தொன் ஆகும். இதில் இறக்குமதிகள் மூலம் 86 வீதம் பூர்த்தி செய் யப்படுகிறது.

வெங்காய தேவையில் 14 வீதமானவற்றை பூர்த்தி செய்ய உள்நாட்டு உற்பத்திகள் பயன் படுத்தப்படுகின்றன.



நவம்பர் மாதத்தின் மூன் றாம் வாரத்தில், இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ வெங்காயத்தின் சில்லறை விலை 290-390 ரூபாவாகவும், 1 கிலோ கிராம் உள்ளூர் பெரிய வெங்காயத்தின் விலை 340- 400 ரூபாவாகவும் இருந் தது. (அ)

# கோப்பாய் துயிலும் இல்லம் முன் சிவாஜிலிங்கம் சுடரேற்றி அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 28

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக நேற்று சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை வடமாகாண சபையின் முன் னாள் உறுப்பினர் எம்.கே. சிவா ஜிலிங்கம் உள்ளிட்டவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

கோப்பாய் மாவீரர் துயி லும் இல்லம் இராணுவத்தின ரால் இடித்து அழிக்கப்பட்டு தற்போது இராணுவத்தின ரின் 51ஆவது படைப்பிரி வின் தலைமையகம் அமைக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (அ)



# ருஹுணு கல்விப் பீடத்தில் மாணவர்கள் மீது தாக்குதல்

கொழும்பு, நவ. 28

காலி அக்மீமன ருஹுணு தேசிய கல்விப் பீடத்தில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற மோதலில் காயமடைந்த 14 பேர் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

விஞ்ஞான பீட விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்கும் மாணவர்கள் குழுவொன்றே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. குறித்த பீடத்தில் முன்னர் கல்வி பயின்றவர்கள் மற்றும் தற்போது பயிற்சி ஆசிரியர்களாக பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ள குழுவினர் திடீரென விடுதிக்கு வந்து தாக்கியதாக காயமடைந்த மாணவர்கள் தெரிவித்தனர்.

மேலும், விடுதிக்கு வந்த பயிற்சியாளர்கள், புதிய மாணவர்களின் கைத்தொலை பேசிகளை பெற்றுக்கொண்டு துன்புறுத்த ஆரம்பித்தனர் என அங்குள்ள மாணவர்கள் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் சுமார் 50 பேர் கொண்ட குழு வொன்று விஞ்ஞான பீடத்தின் வேலியை உடைத்து உள்ளே நுழைந்ததாக ருஹுணு விஞ்ஞான பீடத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் இதுவரை எவ்வித முறைப்பாடும் கிடைக்கப்பெறவில்லை என அக்மீமன பொலிஸார் தெரிவித்தனர்.(அ)

# தபால் திணைக்களத்தின் வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 28

இலங்கையில் இருந்து தபால் திணைக்களத்தின் ஊடாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் தபால் பொருட்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் வெளிநாட்டு தபால் கட்டணத்தை அதிகரிக்க தபால் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அதனுடன் ஒப்பிடும் போது தனியார் பொதி விநியோக நிறுவனங்களின் கட்டணமும் விலை உயர்த்தப்பட்டது.

இதன் காரணமாக தபால் திணைக்களத்தின் ஊடாக அனுப்பப்படும் பொருட்களில் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், அதற்கேற்ப வருமானம் அதிகரிப்பதாகவும் பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும், வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்படும் தபால் பொருட்கள் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# மாகாண சபை தேர்தல் எப்போது?

## சபையில் டலஸ் கேள்வி



கொழும்பு, நவ. 28

இனப்பிரச்னைக்கு தீர்வாக கொண்டு வரப்பட்ட மாகாண சபை தேர்தல் எப்போது நடத்தப்படும் என குறிப்பிடப்பட முடியாத நிலையில் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் உள்ளூராட்சித் தேர்தலும் பிற்போடப்பட்டால் தமிழ்களின் நிலை குறித்து உலகம் என்ன குறிப்பிடும் என்பது தொடர்பாக அரசாங்கம் அவதானத் துடன் செயற்படவேண்டும் என அவர் கூறினார்.

பாராளுமன்றில் நேற்று முன் தினம் இடம்பெற்ற விவாதத்தில் பேசிய அவர், மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டமைக்கு தற்போதைய ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் பொறுப்புக் கூற வேண்டும்.

மேலும் கலப்பு தேர்தல் முறைமைக்கு அனைவரும் இணக்கம் தெரிவித்துள்ள பின்னணியில் மீண்டும் தேர்தல் முறைமை தொடர்பாக ஆராய தெரிவுக் குழுவை ஸ்தாபிப்பது அதிருப்தி தருகிறது.

தேர்தல் புறக்கணிக்கப்படும்போது அது ஜனநாயகத்திற்கு எதிரான செயற்பாடுகளைத் தோற்றுவிக்கும் என்பதற்கு வரலாற்றில் பல சான்றுகள் காணப்படுகின்றன-என்றார். (அ)

# சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவில் 9 மாதங்களில் 1,100 முறைப்பாடுகள்!

கொழும்பு, நவ. 28

இந்த வருடத்தின் முதல் 9 மாதங்களில் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவிற்கு 1100 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முறைப்பாடுகள் மீது நடவடிக்கை எடுக்காமை, பக்கச்சார்பான தீர்வுகள், அதிகார துஷ்பிரயோகம், தாக்குதல்கள், சித்திரவதைகள், பெண்களை துன்புறுத்துதல், போதைப் பொருள் தொடர்பான பொய்யான குற்றச்சாட்டுகள் போன்ற சம்பவங்கள் தொடர்பிலேயே இந்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸ் ஆணைக்குழுவின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இருபத்தி இரண்டாவது அரசியலமைப்பு திருத்தத்தின் பிரகாரம் புதிதாக சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படும் வரை தற்போதுள்ள ஆணைக் குழு இந்த முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# யாழில் முன்பள்ளி ஆசிரியை தாக்கப்பட்ட 3 வயது சிறுவன்!

யாழ்ப்பாணம், நவ. 28

கோப்பாய் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட முன்பள்ளி நிலையம் ஒன்றில், 3 வயது சிறுவன் ஆசிரியையால் தாக்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுவன் தற்போது சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த ஆசிரியை சிறுவர்களுக்கு கோலாட்டம் பழக்கியுள்ளார். இதன்போது சிறுவன் தவறிழைத்ததாக தெரிவித்து அவனை கோலாட்ட தடியால் அடித்துள்ளார். பின்னர் சிறுவனின் அழுகையை அடக்குவதற்கு முயற்சித்துள்ளார். இதனால் முகத்தில் கீறல் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட சிறுவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், 36 வயதான அந்த ஆசிரியை கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# சூரிய மின்கலங்களை பொருத்த நடவடிக்கை

கொழும்பு, நவ. 28

அடையாளங்காணப்பட்ட இராணுவ முகாம்கள், பாடசாலைக் கட்டடங்கள் மற்றும் அரச அலுவலகங்களில் சூரிய மின்கலங்களை பொருத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தினால் நாட்டின் சூரிய மின்னுற்பத்தி மேம்பாட்டிற்காக வழங்கப்பட்ட கடனுதவியின் ஊடாக இந்த திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

சூரிய மின்கலங்கள் பொருத்தப்பட வேண்டிய இடங்கள் தொடர்பான ஆவணமொன்று, தற்போது இந்திய தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைவாக, இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடாக சூரிய மின்கலங்களை பொருத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (அ)

# 7 சுயாதீன ஆணைக்குழுக்களை புதிதாக நியமிக்க நடவடிக்கை

கொழும்பு, நவ. 28

எதிர்வரும் டிசெம்பர் மாதம் புதிய அரசியலமைப்பு பேரவைக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட பின்னர் தற்போதுள்ள ஏழு சுயாதீன ஆணைக் குழுக்கள் நீக்கப்பட்டு ஏழு புதிய ஆணைக் குழுக்கள் நியமிக்கப்படும் என்று பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, அண்மையில் நிறைவேற்றப்பட்ட 21 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக் குழு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, தேசிய காவல்துறை ஆணைக்குழு, பொதுச் சேவை ஆணைக்குழு உள்ளிட்ட ஏழு ஆணைக் குழுக்களுக்குப் பதிலாக புதிய ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன.

இவற்றில் சில ஆணைக் குழுக்களுக்கு தற்போது சபையில் உள்ள உறுப்பினர்களே நியமிக்கப்படலாம் என தெரியவருகின்றது.

ஆனால் பெரும்பான்மையான ஆணைக் குழுக்களுக்கு புதிய ஆணையாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான நடவடிக்கைகள் சுயாதீன தேர்தல்கள் ஆணைக் குழுவினால் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. எதிர்வரும் ஜனவரி மாதம் ஒழிக்கப்படும் ஆணைக் குழுக்களில் அந்த ஆணைக்குழுவும் இடம்பெற்றுள்ளது என்பது சிறப்பு விடயமாகும்.(அ)

# சு.க. தலைவராகிறார் சந்திரிகா?



கொழும்பு, நவ. 28

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரைவில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக வருவார் என்று புதிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கம நம்பிக்கை வெளியிட்டுள்ளார் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாக அந்த அரசியல் வட்டாரங்கள் மேலும் கூறின.(அ)

# நேற்றைய மாவீரர் நினைவேந்தலின்போது...


முள்ளியவளை


வடமராட்சி எள்ளங்குளம்


வடமராட்சி கிழக்கு உடுத்துறை


மன்னார் ஆட்காட்டிவெளி


கொடிகாமம்


கோப்பாய்


திருகோணமலை - சம்பூர் ஆலங்குளம்


மட்டக்களப்பு தரவை


யாழ்ப்பாணம், நல்லூர்


யாழ்.தமிழரசு கட்சி அலுவலகம்


ஈச்சங்குளம்


மன்னார் பண்டிவிரிச்சான்


கொக்கட்டிச்சோலை மாவடிமுன்மாரி


முள்ளிவாய்க்கால் துயிலுமில்லம்


முழங்காவில்


மட்டக்களப்பு தாண்டியடி


தேராவில் விசுவமடு


முல்லைத்தீவு நகர கடற்கரை

# 15 லட்சம் வெளிநாட்டினருக்கு குடியிருப்பு உரிமை வழங்க

# கனடா திட்டம்!



கனடா 2025ஆம் ஆண்டுக்குள் 15 லட்சம் குடியேற்றங்களை அனுமதிப்பதாக இலக்கு நிர்ணயித்துள்ளது. வயது முதிர்ந்த பேபி பூமர் தலைமுறையால் (இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு பிறப்பு விகிதம் வளர்ச்சியடைந்த காலகட்டத்தில் பிறந்த தலைமுறையினர்) அதன் பொருளாதாரத்தில் எஞ்சியிருக்கும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு கனடா குடியேற்றத்தை எதிர்பார்க்கிறது. ஆனால், இவ்வளவு வெளிநாட்டவர்களின் வருகையை அனைத்து தரப் பினரும் ஒப்புக் கொள்ள வில்லை.

நவம்பர் மாதத் தொடக்கத்தில், கூட்டாட்சி அரசு 2025ஆம் ஆண்டுக்குள், ஓராண்டுக்கு ஐந்து லட்சம் குடியேறுபவர்கள் என்ற கணக்கில் 15 லட்சம் குடியேற்றங்களை வரவேற்கும் ஒரு தீவிரமான திட்டத்தை அறிவித்தது.



இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் ஒவ்வோர் ஆண்டும் பிரிட்டனில் குடியேறுகிறவர்கள் எண்ணிக்கையைவிட 8 மடங்கும், அமெரிக்காவில் குடியேறுவோர் போல 4 மடங்கும் கனடாவில் குடியேற்றம் நடக்கும்.

பல புதிய குடியேற்றங்களை வரவேற்பதில் கவலைக்குரிய விஷயங்களும் இருப்பதாக சமீபத்திய கணக்கெடுப்பு காட்டுகிறது.

**குறையும் பிறப்பு விகிதம்**

பல ஆண்டுகளாக, மக்கள்தொகை மற்றும் பொருளாதாரத்தை வளர்த்துக்கொள்வதற்காக கனடா குடியுரிமை இல்லாமல் காலவரையறையின்றி நாட்டில் தங்குவதற்கு உரிமையுள்ள நிரந்தர குடியிருப்பாளர்களை ஈர்க்க முயன்று வருகிறது.

கடந்த ஆண்டு, அந்நாடு 405,000 நிரந்தர குடியிருப்பாளர்களை வரவேற்றது. இது அதன் வரலாற்றில் மிக அதிகமான எண்ணிக்கை.

பல மேற்கத்திய நாடுகளைப் போலவே, கனடாவிலும் வயதானோரின் மக்கள் தொகை மற்றும் குறைவான பிறப்பு விகிதம் உள்ளது. அதாவது நாடு வளர்ச்சியடைய வேண்டுமானால், புலம்பெயர்ந்தவர்களைக் கொண்டு வர வேண்டும்.

குடியேற்றம் செயலூக்கம் கொண்ட மக்கள்தொகையின் வளர்ச்சியை அதிகரிக்கிறது. அது 2032ஆம் ஆண்டில் நாட்டின் மக்கள்தொகை அதிகரிப்புக்குப் பங்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அரசாங்க செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உலகில் தனித்துவமான பகுதி**

இன்று, நான்கு கனடியர்களில் ஒருவர் புலம்பெயர்ந்தவராக நாட்டிற்கு வந்தவராக உள்ளார். இது ஜி7 நாடுகளில் மிக உயர்ந்த எண்ணிக்கை. “உலகின் உருகிக் கொண்டிருக்கும் பகுதி” என்று அழைக்கப்படும் அமெரிக்காவில் 14 வீதம் மட்டுமே குடியேறியவர்கள்.

மெக்மாஸ்டர் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானியான ஜெஃப்ரி கேமரூன், கனடா போன்ற பல நாடுகள் குறைந்த பிறப்பு விகிதங்கள், வயதான மக்கள்தொகை போன்றவற்றை எதிர்கொண்டாலும், எந்தவொரு குடியேற்ற முறையின் வெற்றியும் மக்கள் ஆதரவைப் பொறுத்தே அமையும் என்று நம்புகிறார்.

“குடியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் காரணியாக பெரும்பாலான நாடுகளில் பொதுமக்களின் கருத்து இருக்கிறது,” என்று அவர் கூறுகிறார்.

அமெரிக்காவில் தெற்கு எல்லை வழியாக நாட்டிற்குள் நுழையும் புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ள நிலையில், இருக்கும் வேலைவாய்ப்புகளை விட அதிகமான புலம்பெயர்ந்தோர் இருப்பது குறித்துப் பரவலான கவலை ஏற்பட்டுள்ளது.

மறுபுறம், கனடாவில் வரலாற்றுரீதியாக குடியேற்றத்திற்கு மிக அதிகமான ஆதரவு இருந்துள்ளது.

“கனடாவுக்கான குடி யேற்றம் அரசாங்கத்தால் நன்கு நிர்வகிக்கப்படுகிறது, நாட் டின் நலன்களுக்கு அது பங்களிக்கும் வகையில் நிர்வகிக்கப்படுகிறது என்பதில் பொது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் அதற்கு ஒரு காரணமென்று நான் கருது கிறேன்,” என்று கேமரூன் விளக்குகிறார். இருப்பினும், குடியேற்றத்தில் எந்தப் பிரச்னையும் இல்லையென்று இதற்குப் பொருளில்லை.

சமீபத்திய ஆண்டுகளில், அமெரிக்க எல்லையில் குடியேற்றம் சில சர்ச்சைகளை ஏற்படுத்தியது. மேலும் 2018இல் ஒரு புதிய வலதுசாரி கட்சி தோன்றியது. கனடாவின் மக்கள் கட்சி 2019 ஆம் ஆண்டு கூட்டாட்சித் தேர்தலின் போது இதை தேசிய உரையாடலின் ஒரு பகுதியாக வைத்திருந்தது. குடியேற்றம் குறித்து கனடாவின் சில பகுதிகளில் வேறுபட்ட கருத்துகளும் உள்ளன.

அரசாங்கம், ஆண்டுக்கு ஐந்து லட்சம் பேரை புதிதாகக் குடியேற்றும் (2021ஆம் ஆண்டை விட 25 வீதம் அதிகம்) தனது தீவிர இலக்குகளை அறிவித்தபோது, தனது சொந்த குடியேற்ற வரம்புகளை நிர்ணயிக்கும் உரிமை பெற்ற கியூபெக் மாகாணம், ஆண்டுக்கு 50,000 பேருக்கு மேல் தான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று தெளிவுபடுத்தியது. நாட்டின் மக்கள் தொகையில் 23 வீதம் பேர் வாழும் கியூபெக் மாகாணம், 10 வீதம் வெளிநாட்டவரை மட்டுமே ஏற்றுக்கொள்ளும்.

கியூபெக் பிரதமர் பிரான்சுவா லெகோல்ட், அதிகமான புலம்பெயர்ந்தோர் வருவது இந்த மாகாணத்தில் பிரெஞ்சு மொழியை பலவீனப்படுத்தும் என்று தான் கவலைப்படுவதாகக் கூறினார்.

“50,000 பேர் குடியேறும்போதே கூட பிரெஞ்சு மொழியின் வீழ்ச்சியைத் தடுப்பது கடினம்,” என்று அவர் கூறினார்.

கனடாவில் வளர்ச்சிக்கு அதிக இடம் இருக்கலாம் என்பது உண்மையாக இருந்தாலும், சில இடங்கள் அதிக அழுத்தத்தை உணர்கின்றன. நாட்டின் சுமார் 10 சதவீத மக்கள் வசிக்கும் ரொரன்டோ, வான்கூவர் போன்ற பெரிய நகரங்கள், மலிவு விலையில் வீட்டுவசதியைப் பெறுவதில் நெருக்கடியைச் சந்திக்கின்றன.

1,537 கனடியர்களிடையே லெகெர் மற்றும் கனடிய ஆய்வுகளுக்கான சங்கம் நடத்திய ஆய்வில், நான்கு பேரில் மூவர், குடியேற்றத்திற்கான புதிய திட்டம் வீட்டுவசதி மற்றும் சமூக சேவைகளில் ஏற்படுத்தக்கூடிய விளைவுகளைப் பற்றி ஓரளவுக்கு அல்லது மிகவும் கவலை கொண்டிருப்பதாகக் கூறியுள்ளனர். ஏறக்குறைய பாதிப்பேர் (49 வீதம்) இந்த இலக்குகள் மிக அதிகம் என்று வாதிட்டனர், 31 வீதம் பேர் இது சரியான இலக்கு தான் என்று வாதிட்ட னர்.

**கனடிய அணுகுமுறை**

பொருளாதார குடியேற்றத்திற்கு முக்கியத்துவம் அளிப்பது மேற்கத்திய உலகில் கனடா தனித்துவமாக இருப்பதற்கான மற்றொரு காரணம். நிரந்தரக் குடியுரிமை பெற்றவர்களில் பாதிப் பேர் திறமையின் அடிப்படையிலேயே அனுமதிக்கப்பட்டுள்ளனர். 2025ஆம் ஆண்டுக்குள் இந்த அளவு 60 சதவீதத்தை எட்டும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

கனடாவில் கட்டமைப்பு எவ்வாறு வடிவமைக்கப்பட்டது என்பதும் இதற்கான காரணத்தில் ஒரு பகுதி என்று கேமரூன் விளக்குகிறார். கனடா, 1960களில் ஒதுக்கீட்டு முறையிலிருந்து புள்ளிகள் அடிப்படையிலான அமைப்புக்கு மாறியது. இந்த முறை கனடாவின் பொருளாதாரத்திற்குப் பங்களிக்கும் உயர்-திறன் வாய்ந்த புலம்பெயர்ந்தோருக்கு முன்னுரிமை அளித்தது.

“அதே கொள்கை இன்றும் வழிநடத்துகிறது,” என்று அவர் கூறினார்.

பிரிட்டனில், நிரந்தர குடியிருப்பாளர்களில் நான்கில் ஒருவருடைய காலவரையறையின்றித் தங்குவதற்கான உரிமை, சற்று அதிகமாகச் செய்யும் பொருளாதாரரீதியிலான பங்களிப்பால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அமெரிக்காவில், 20 வீத கிரீன் கார்டுகள் மட்டுமே அந்தக் காரணத்திற்காக வழங்கப்படுகின்றன. இரண்டு நாடுகளும் பொருளாதாரரீதியிலான புலம்பெயர்ந்தோரின் விகிதத்தை அதிகரிக்க நினைப்பதாகக் குறிப்பிட்டுள்ளன. பெரும்பாலான பொருளாதார குடியேற்றங்களில் அவர்களுடைய முதலாளிகள் நிதியுதவி செய்ய வேண்டும்.

கனடாவில், வேலைவாய்ப்போடு வருவது உங்களுடைய மொத்த புள்ளிகளில் கணக்கில் எடுக்கப்படும். ஆனால் அது அவசியம் என்றில்லை.

**கனடா தனது இலக்கினை அடைய முடியுமா?**

கனடா மற்ற பெரிய நாடுகளைவிட திறமையான புலம்பெயர்ந்தோரை வரவேற்பதோடு மட்டுமின்றி, 2021இல் 20,428 அகதிகளை ஏற்றுக்கொண்டு, அகதிகள் குடியேற்றத்திற்கான சிறந்த நாடுகளில் ஒன்றாகவும் உள்ளது.

அந்நாடு எதிர்காலத்திற்கான லட்சிய இலக்குகளை நிர்ணயித்திருந்தாலும், அது எப்போதும் தனது சொந்த எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யவில்லை என்பதை வரலாறு காட்டுகிறது. 2021ஆம் ஆண்டில், கனடா சுமார் 59,000 அகதிகளை குடியேற்றுவதை இலக்காகக் கொண்டிருந்தது. இது முன்னர் ஏற்றுக்கொண்ட அளவைவிட மூன்று மடங்கு அதிகம்.

கனடிய பொது ஒளிபரப்பு நிறுவனமான சிபிசிக்கு அளித்த பேட்டியில், குடிவரவு அமைச்சர் சீன் ஃப்ரேசர் கனடாவிலும் உலகெங்கிலும் உள்ள கோவிட் பேரிடர் தொடர்பான எல்லை மூடல் காரணமாகப் பின்னடைவு ஏற்பட்டதாகக் கூறினார்.

2023ஆம் ஆண்டளவில், 76,000 அகதிகளை குடியேற்ற கனடா இலக்கு வைத்துள்ளது.



# திருகோணமலை பாரிய மணல் மோசடியில் புவியியல் இயக்குனர்?

## சுற்றுச்சூழலை கருத்தில்கொள்ளாது வழங்கப்படும் அனுமதி பத்திரங்கள்!

— ரவிந்து



புவியியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளர் சஜ்ஜன டி சில்வாவின் அனுசரணையுடன் 3,000 ஏக்கர் மிளகாய்த் தோட்டம் என்ற போர்வையில், மகாவலி ஆற்றின் இயற்கையான கழிமுகப் பகுதியான திருகோணமலை மாவட்டத்தின் சாபி நகர் பகுதியில் தற்போது பாரிய மணல் கடத்தல் இடம்பெற்று வருகின்றது.

புவியியலாளர் மற்றும் சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளர், முன்னாள் சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் ஷசீந்திர ராஜபக்ச ஆகியோருக்கு மேலதிகமாக, அரசியல்வாதிகள் மகாவலி ஆற்றில் பாரிய மணல் கடத்தலுக்கு உதவுகின்றனர்.

இந்த மணல் கடத்தல் காரணமாக சாபி நகர் பகுதியில் உள்ள மகாவலி ஆற்றின் சென்சிட்டிவ் சுற்றுச்சூழல் வலயத்தில் சுமார் 40 சதுர அடியில் பெரிய குழிகளை தோண்டி மணல் கடத்தல் எப்படி நடந்துள்ளது என்பதை இப்போது பார்க்க முடிகிறது.

புவியியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் மஞ்சுள பிரசாத் சேனாரத்ன இந்த மணல் கடத்தலின் மற்றுமொரு மூளையாக செயற்படுவதுடன், சாபி நகரில் இருபத்தி ஏழு ஹெக்டேயர் மணல் அகழ்விற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் மற்றும் இயற்கை ஆய்வு நிலையம் இதனை 2021 ஆம் ஆண்டு வெளிப்படுத்திய போதிலும், சட்டவிரோத மணல் கடத்தல் இடம்பெறவில்லை எனவும், மிளகாய் செய்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் முன்னாள் சுற்றுச் சூழல்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்படும் என்று மஹிந்த அமரவீர தெரிவித்த போதிலும் அவ்வாறானதொரு விசாரணைக் குழுவினால் நடத்தப்பட்ட விசாரணையோ அதன் அறிக்கையோ இதுவரையில் இடம்பெறவில்லை.

2001 முதல் 2022 வரை நடந்த பெரிய அளவிலான மணல் கடத்தல் தொடர்பாக, சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை ஆய்வு நிலையம், கூகுள் எர்த் மூலம் வரைபடத்தை தயாரித்து, அதன்படி, பாரிய அளவில் மணல் கடத்தல் இடம்பெற்ற இடங்களை பார்க்க முடியும்.

புவியியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, புவியியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளரின் வேண்டுகோளுக்கு இணங்க அஹுங்கம மணல் அகழ்வு நிறுவனத்திற்கு சட்டவிரோதமாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு உரிமங்கள் இடைநிறுத்தப்பட்ட நிலையில், மணல் கடத்தல்காரர்கள் மகாவலி ஆற்றில் வரிசையாக அகழ்வு செய்கிறார்கள்.

இயற்கையான விவசாய பயிர் நிலங்களில் பாரிய மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்குவது சட்டவிரோதமானது என்று சுற்றுச் சூழல்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்ததுடன், விசாரணைகளை மேற்கொள்வதாகவும் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

சட்டவிரோதமாக வழங்கப்பட்ட IML/A/HO/N/15582 என்ற மணல் உரிமத்தைப் பயன்படுத்தி அரசியல் உதவியுடன் இந்த மோசடி நடத்தப்படுகிறது.

புவியியல் மற்றும் சுரங்கத்துறை பெரிய அளவிலான சுரங்கங்களுக்கு அனுமதி வழங்கினால், சுற்றுச்சூழல் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் மற்றும் இந்த சுற்றுச்சூழல் அமைப்பின் உணர்திறன் ஆய்வு செய்யப்பட வேண்டும். இது இல்லாமல் பாரிய அளவில் மணல் அள்ள அனுமதி வழங்குவது சட்ட விரோதமான செயலாகும். சட்டவிரோத மணல் அகழ்வினை தடுக்க சுற்றுச் சூழல்துறை அமைச்சருக்கு அதிகாரம் இருந்தாலும், புவியியல் மற்றும் சுரங்கத் திணைக்களம் அதன் இயக்குனரின் அரசியல் நலன்களுக்கு ஏற்ப இயங்கி வருகிறது.

சாபி நகரில் சிறிய அளவிலான மணல் அகழ்விற் கான அனுமதியை உள்ளூர்வாசிகள் கோரிய போதிலும், புவியியல் சுரங்கப் பணியகம் அதனை மறுத்துள்ளது, கூடைகளைக் கொண்டு மணல் அகழ்வது இயற்கை சூழலுக்கு சேதம் விளைவிக்கும் என்று தெரிவித்துள்ளது.



இந்த பகுதியில் அனுமதியின்றி பாரிய மணல் அகழ்வு அனுமதிக்கப்பட் டுள்ள சாபி நகர் பகுதியில், மகாவலி ஆற்றின் நீர் படிப் படியாக பாய்வதால் இயற்கையாக உருவான நீர்க் குளங்கள் மற்றும் மணல் படிவுகள் அதி களவில் காணப்படு கின்றன. ஆனால் அந்த பகுதிகளில் மணல் மேடுகளை அகற்ற வேண்டும் என்றால் அதற்கான முறையான ஆய்வு நடத்த வேண்டும். சாத்தியமான பேரழிவை மணல் அகழ்வினால் கட்டுப்படுத்த முடியுமானால் மட்டுமே மணல் அகழ்வு அனுமதிக்கப்படும்.

ஆனால், இந்த மணல் அகழ்வு அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் எந்த அறிவியல் அடிப்படையும் இன்றி தற்போது நடைபெற்று வருகிறது. திருகோணமலை பிரதேசத்தில் மணல் அகழ்வு தொடர்பான 2021 அறிக்கையின் பிரகாரம் ஏற்கனவே பெருமளவிலான மணல் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு அதன் மூலம் மகாவலி ஆற்றின் கரையில் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. அப்பகுதியில் உப்புத்தன்மை அதிகரித்துள்ளதையும் ஆராய்ச்சி உறுதி செய்துள்ளது. அத்துடன், மகாவலி ஆற்றின் வலது கரைக்கு மாத்திரம் வழங்கப்பட்ட மணல் திணிப்புக்கான அனுமதிப்பத்திரங்கள் இடப்புறம் வழங்கப்பட்டுள்ளதுடன், சேருவாவில தொடக்கம் கிண்ணியா பிரதேசம் வரையான 22 கிலோமீற்றர் தூரத்தில் 1,300 மணல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனால், அப்பகுதியில் கடுமையான சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டுள்




ளது. தற்போது கந்தளாய் மற்றும் சேருவாவிலயில் சுமார் அறுபதாயிரம் ஏக்கர் விவசாயம் செய்யப்பட்டு வருவதுடன், மணல் அள்ளப்படுவதால் ஏற்படும் உவர் தன்மையினால் நெற்செய்கை பாரியளவில் அழிந்து வருகின்றது.


மகாவலி கங்கை நாட்டின் முக்கிய ஆறுகளில் ஒன்றாகும். பொலன்னறுவை மற்றும் திருகோணமலை மாவட்டத்திலுள்ள எல்லங்காவும் சுற்றுச்சூழலை செயல்படுத்தும் முக்கிய நீர் தாங்கிகளாகும். பெரிய அளவிலான மணல் அகழ்வு நிலத்தடி நீர் சூழலை அழித்து, நீர்ப்பாசன சுற்றுச்சூழல் அமைப்பையும் மோசமாக பாதிக்கிறது. மேலும், புதிய வரவு-செலவுத் திட்டம் வெளியிடப்பட்டுள்ளதால், நாட்டின் கனிம வளங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதால், அந்த கனிம வளங்களை, கொள்ளையர்களுக்கு விற்பனை செய்ய அரசு முயற்சித்து வருகிறது.

**(கட்டுரையாளர், தேசிய ஒருங்கிணைப்பாளர், சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை ஆய்வு மையம்.)**


# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுகள் எது?



1)
2)
3)


38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?




1) 2) 3)

39.  3 4 3 = 15 இங்கு ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x, + 2) +, x 3) x, -

40. 



1) 2) 3)

01) **பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ....................

ii) “நவீன” என்பதன் எதிர்க்கருத்து யாது? ....................

iii) அஃறிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

....................

iv) “எழில்” என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ....................

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ....................

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ....................

(6 புள்ளிகள்)

02) அஃறிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

03) **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

....................

(1 புள்ளி)

04) **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

05) **பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

**37. 1** **38. 2** **39. 1** **40. 2**

**01.** 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

**02.** விழுகின்றன

**03.** அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

**04.** 1) × 2) ✓ 3) × 4) ×

**05.** ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

## கல்வி tv CHANNEL-1 — 28.11.2022 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2 — 28.11.2022 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# சம்மாந்துறை வலயத்தில் 44 மாணவர்களுக்கு 9 ஏ!

அம்பாறை, நவ. 28

சம்மாந்துறை வலய வரலாற்றில், க.பொ.த. சா.தர பரீட்சை பெறுபேறுகளின்படி முதல் தடவையாக 44 மாணவர்கள் 9ஏ சித்திகளைப் பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளதாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ் எம் எம் . அமீர் தெரிவித்தார்.

இச் சாதனையில் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் முப்பது மாணவர்களுடன் பிரதான பங்கை வகிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதைவிட, நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் நான்கு மாணவர்களும், சம்மாந்துறை அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நான்கு மாணவர்களும் 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

ஏனைய ஆறு பாடசாலைகளில் தலா ஒவ்வொரு மாணவரும் 9 ஏ சித்தி பெற்று சாதனை படைத்துள்ளனர் .

கடந்த வருடம் 26 மாணவர்கள் 9 ஏ சித்திகள் பெற்றிருந்தனர். இம் முறை அது 18 ஆல் அதிகரித்து 44 ஆக உயர்ந்து சாதனை படைத்துள்ளது.

இதேவேளை, கடந்த வருடம் 45 மாணவர்கள் சகல பாடங்களிலும் சித்தியின்மையைப் காட்ட, இம்முறை அது 20 ஆல் குறைந்து 25ஆக மாறியுள்ளது. இது ஆரோக்கியமான வளர்ச்சி என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்காக ஒத்துழைத்த மாணவர்கள், பெற்றோர்கள், அதிபர்கள் ,ஆசிரியர்கள், கல்வி சார்ந்த உத்தியோகத்தர்கள் அனைவரையும் நன்றியுடன் பாராட்டுகின்றேன் என்றும் அவர் கூறினார். (அ)

# கல்முனை கல்வி வலயத்தில் 106 மாணவர்கள் 9 ஏ சித்தி!

அம்பாறை, நவ. 28

கல்முனை வலயத்தில், இம்முறை வெளியான க.பொ.த. சா.தரப் பரீட்சை பெறுபேறுகளின் படி 106 மாணவர்கள் 9 ஏ சித்தி பெற்று சாதனை படைத்துள்ளதாக கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு 87 மாணவர்கள் 9 ஏ சித்திகளை பெற்றிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்முறை 2815 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி இருந்தார்கள். இவர்களில் 3 சி 2 எஸ் சித்திகளை 2194 மாணவர்களும் ,3 சி 3 எஸ் சித்திகளை 1949 மாணவர்களும் பெற்று சித்தி அடைந்தார்கள்.

ஆக, 41 மாணவர்கள் சகல பாடங்களிலும் சித்தி பெற தவறி இருக்கின்றார்கள். மொத்தமாக 78சதவீத மாணவர்கள் சித்தி பெற்றிருக்கின்றார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இம்முறை வெளியான பெறுபேறுகளின் படி, வலயத்தில் முதல் அதிகூடிய 96 வீத சித்தி மற்றும் அதிகூடிய 32 மாணவர்கள் 9 ஏ சித்திகளைப் பெற்ற பாடசாலையாக கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரி திகழ்கின்றது.

அடுத்தபடியாக 17 மாணவிகள் 9 ஏ சித்திகளுடன் கல்முனை மகுமூத் மகளிர் கல்லூரியும், அடுத்தபடியாக 9 மாணவர்கள் 9ஏ சித்திகளுடன் காரைதீவு இ.கி.சங்க பெண்கள் பாடசாலையும் முன்னணியில் உள்ளது.

கல்முனை வலயத்திலே சாதாரண தர வகுப்புகள் உள்ள 33 பாடசாலைகளில் 96 வீதமான அதிகூடிய சித்தி வீதத்தைப் பெற்று முதல் இடத்தை கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரி திகழ்வது குறிப்பிடத்தக்கது. (அ)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தி மிகத்தீவிரம்

## பெண் உட்பட 6 பேர் கைது

**மட்டக்களப்பு, நவ. 28**

**மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களில் கசிப்பு உற்பத்தி தீவிரமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் கசிப்பு மற்றும் கோடா என்பன சட்ட விரோதமான முறையில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக களுவாஞ்சிகுடி பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, துரிதமாக செயற்பட்ட பொலிஸார் பெருமளவு கசிப்பு மற்றும் கோடா போன்றவற்றை கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன், இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பெண் ஒருவர் உட்பட 6 பேரையும் சந்தேக கத்தின் பெயரில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்போது, கசிப்பு உற்பத்திற்கு பயன் படுத்தப்பட்ட பொருட்கள் மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (அ)



# உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டம் அம்பாறையில் ஆரம்பம்



அம்பாறை, நவ. 28

ஜனாதிபதியின் தேசிய உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தம் வேலைத்திட்டம் அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதனடிப்படையில், சாய்ந்தமருது பிரதேச செயல கத்தின் அனுசரணையில் பிர தேச செயலகமும் சாய்ந்த மருது கமநலச் சேவை நிலைய மும் இணைந்து பயிர் விதை கள் நடும் வேலைத்திட்டம் மாவடிப்பள்ளி பிரதேசத்தில் மேட்டு நிலத்தில் நடப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்ச்சித்திட்டம் சாய்ந்த மருது உதவிப்பிரதேச செயலளர் எம்.ஐ. முஆபிக்கா தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர், விவசாய உத்தியோகஸ்தர்கள், கமநலச்சேவை காரியாலய பிரதம இலிகிதர் ஐ.எல்.ஏ.அஸீஸ், விவசாயிகளின் தலைவர் ஐ.எல்.ஏ.மஜீத் மற்றும் பிரதேச விவசாயிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ)

# கிழக்கில் அண்ணாவிமார் மாநாடு

நிந்தவூர், நவ. 28

கிழக்கு மாகாணத்தில், வரலாற்று முக்கியத்துவம் பெற்ற வடமோடி, தென்மோடி கூத்துக் கலைக்கு புத்தூக்கமளிக்கும் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவிருக்கின்றது.

இந்த பண்பாட்டு கூத்துக்கலை அருகிப் போய்விடாது பாதுகாக்கும் நோக்குடனும், இக்கலையை வளர்த்துவரும் அண்ணாவிமார் தொடர்பான வரலாற்றுப் பதிவை ஆவணப்படுத்தவும் இதன் மூலம் ஆவன செய்யப்படவிருக்கின்றது.

கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளராகப் பதவியேற்றதிலிருந்து பல முன்னோடித்திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்திவரும் மாகாண பணிப்பாளர் திருமதி. சரண்யா சுதர்சனின் எண்ணக்கருவிற்கு அமைவாக இந்த கூத்துக்கலை புத்தூக்க திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த திட்டத்தின் முக்கிய நிழகழ்வாக எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடுப்பகுதியில் கிழக்கு மாகாணம் தழுவிய அண்ணாவிமார் மாநாடொன்றை நடத்துவதற்கான ஏற்பாடு பணிப்பாளர் சரண்யா சுதர்சனின் ஆலோசனைக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அருகிவரும் கூத்துக்கலைக்கு புத்தூக்கமளிக்கவும், இக்கலை தொடர்பில் எதிர்கால இளம் சந்ததியினருக்கு விழிப்பூட்டவும், இக்கலையை உயிரோட்டத்துடன் மிளிரச் செய்து வரும் அண்ணாவிமாரின் வரலாற்றுப்பதிவை ஆவணப்படுத்தவும் இந்த மாநாட்டின் மூலம் வழிவகுக்கப்படவிருக்கின்றது.

மாநாட்டையொட்டி “தெய்” எனும் பெயரில் விசேட மலர் ஒன்று வெளியிடப்படவிருப்பதுடன், கிழக்கிலுள்ள அண்ணாவிமார்களது விபரங்கள், வரலாறுகள் கொண்ட ஆவணமாகவும் இந்த மலர் அமையவிருப்பதாகவும் ஏற்பாட்டுக்குழு முககியஸ்த்தரும், மாவட்ட கலாசார இணைப்பாளருமான த.மலர்ச்செல்வன் தெரிவித்தார்.

மேலும் அண்ணாவிமாரின் ஒன்றுகூடலான இந்த மாநாட்டில் கலைக் கூத்தர் விருது, மாண்புறுவிருது இளம் அண்ணாவிமார் விருது ஆகியவிருதுகள் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்டு அண்ணாவிமார் கௌரவிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பணிப்பாளர் சரண்யா சுதர்சனின் ஆக்கபூர்மான ஆலோசனைகளுடன் முக்கியத்துமிக்க நிகழ்வாக மேற்படி அண்ணாவிமார் மாநாடு நடைபெறவிருப்பதாகவும்,

ஏற்கனவே கடந்த 1968 ஆம் ஆண்டு இத்தகைய முதலாவது அண்ணாவிமார் மாநாடு கிழக்கில் இடம்பெற்றதுடன், தமது முயற்சியில் 2012 இல் இரண்டாவது மாநாடு நடைபெற்றதாகவும், மலர்ச்செல்வன் கூறினார். மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த அண்ணாவிமாரின் விபரங்கள் தற்பொழுது திரட்டப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.






# இத்தாலியில் மண் சரிவு! எட்டு பேர் உயிரிழப்பு!!

ரோம், நவ. 28

இத்தாலியில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 8 பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இத்தாலி இஷியா தீவில் உள்ள காசாமிச்சியோலா நகரில் கடந்த 2 தினங்களாக கடும்மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக நேற்று முன் தினம் அங்கு பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் வீடுகள் உட்பட பல கட்டிடங்கள் மண்ணோடு மண்ணாக புதைந்துள்ளதுடன் பெண்கள், சிறுவர்கள் உட்பட பலர் உயிரோடு புதைந்துள்ளனர்.

இதையடுத்து அங்கு உடனடியாக மீட்பு பணிகள் முடுக்கி விடப்பட்டன. பொலிஸார், தீயணைப்பு வீரர்கள் மற்றும் பேரிடர் மீட்புக் குழுவினர் தீவிர மீட்பு பணிகளில் ஈடுபட்டனர். எனினும் 8 பேரை சடலமாக மீட்டுள்ளனர்.

மேலும் ஒரு குழந்தை உட்பட 13 பேர் காணாமல் போயுள்ளதாக கூறப்படுகிறது.

இதனால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. (அ)

# ஐக்கிய அரபு இராச்சியத்தின் முதல் நிலவுப் பயணம் 30 இல்

அபுதாபி, நவ. 28

ஐக்கிய அரபு அமீரகத்தின் முதல் நிலவுப் பயணம் எதிர் வரும் 30ஆம் திகதி மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த நிலவுப் பயணத்திற்கான பணியை முகமது பின் ரஷித் பின் விண்வெளி நிலையம் மேற்கொண்டு வருகின்றது. குறித்த விண்வெளிப் பயணம் நாளை ஆரம்பிக்கப்படவிருந்த போதிலும், மோசமான வானிலை காரணமாக எதிர்வரும் 30ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஸ்பேஸ்-எக்ஸ் மற்றும் ஐஸ்பேஸ் நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த திட்டத்தின் அடிப்படையில் குறித்த விண்கலம் புளோரிடாவின் கேப் கெனவரல் விண்வெளி ஏவுதளத்தில் இருந்து ஏவப்படவுள்ளது. (அ)

# மிக சக்தி வாய்ந்த அணுசக்தியை கைப்பற்றுவதே என் இறுதி இலக்கு

## வடகொரிய ஜனாதிபதி கூறுகிறார்

பியொங்யாங், நவ. 28

உலகின் மிக சக்திவாய்ந்த அணுசக்தியைக் கைப்பற்று வதே தமது இறுதி இலக்கு என்று வடகொரியத் தலைவர் கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளார்.



வட கொரியாவின் மிகப் பெரிய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையான வாசோங்-17 ஐ வெற்றிகரமாக சோதனை செய்த பின்னர், அந்த ஏவுகணை உருவாக்கத்தில் பங்களித்த இராணுவ அதிகாரிகள், பொறியியலாளர்களுக்கு பதவி உயர்வு அளித்தபோது கிம் சனிக்கிழமை இந்த அறிவிப்பை வெளியிட்டார் என்று கொரிய மத்திய செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

"வட கொரியா அரசு மற்றும் அதன் மக்களின் கண்ணியம் மற்றும் இறையாண்மையைப் பாதுகாப்பதற்காக அணு சக்தி படையை உருவாக்கி வருவதாகவும், தனது நாட்டின் "இறுதி இலக்கு உலகின் மிகவும் சக்திவாய்ந்த, நூற்றாண்டில் முன்னோடியில்லாத முழுமையான அணுசக்தி மூலோபாய சக்தியைக் கைப்பற்றுவதாகும்" என அவர் தெரி வித்துள்ளார்.

வாசோங்-17 - அமெரிக்காவை அடையும் திறன் கொண்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை- "உலகின் வலிமையான மூலோபாய ஆயுதம்" என்றும், இது வட கொரியாவின் உறுதியையும், இறுதியில் உலகின் வலிமையான இராணுவத்தை உருவாக்கும் திறனையும் நிரூபித்ததாகவும் அவர் கூறினார்.

இந்த நிகழ்வில், வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன் மற்றும் அவரது மகள், விஞ்ஞானிகள், பொறியாளர்கள் மற்றும் ராணுவ அதிகாரிகள் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படமும் வெளியிடப்பட்டது.

நவம்பர் 18 ஆம் திகதி வடகொரியா கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை ஏவியது. இதை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சில் உறுப்பினர்கள் கண்டித்தனர். அவர்கள் அதை "ஒரு தீவிர அதிகரிப்பு" மற்றும் "சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு தெளிவான அச்சுறுத்தல்" என்று அழைத்தனர். இந்த ஏவுதல் இந்த ஆண்டு வட கொரிய சோதனைகளின் ஒரு பகுதியாகும், இதில் கப்பல் ஏவுகணைகள் மற்றும் டஜன் கணக்கான குறுகிய மற்றும் நடுத்தர தூர பாலிஸ்டிக் ஏவுகணைகள் அடங்கும்.

வட கொரிய விஞ்ஞானிகளும் "பாலிஸ்டிக் ஏவுகணைகளில் அணு ஆயுதங்களை ஏற்றும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியில் ஒரு அற்புதமான பாய்ச்சலை மேற்கொண்டுள்ளனர்" என்று கிம் சனிக்கிழமை கூறினார்.

அவர் மேலும் விவரிக்க வில்லை.

வட கொரியா தனது முக்கிய எதிரியான அமெரிக்காவை தாக்கக்கூடிய அணு ஆயுதத்தை வைத்திருக்கும் இலக்கை அடைய விரும்பினால் அந்த திறன் முக்கியமானது.

வடகொரியாவின் அணு குண்டுகள் மற்றும் ஏவுகணைகள் அமெரிக்கா வரை பறக்கக் கூடியவை என்றாலும், அந்த நாட்டு விஞ்ஞானிகளால் ஏவுகணைகளின் மூக்கில் உள்ள இடுக்கமான இடத்திற்குள் பொருத்துவதற்கு அணு ஆயுதங்களை சிறியதாக மாற்ற முடியுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை என்று இராணுவ விற்பன்னர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சனிக்கிழமையன்று வாசோங்-17 சோதனையில் ஈடுபட்டிருந்த விஞ்ஞானிகள், பொறியாளர்கள், இராணுவ அதிகாரிகள் மற்றும் பிறரிடம் கிம், நாட்டின் அணுசக்தித் தடுப்பை அசாதாரணமான வேகத்தில் விரிவுபடுத்தவும் வலுப்படுத்தவும் எதிர்பார்ப்பதாகக் கூறினார்.

வாசோங்-17 ஏவுகணை சோதனையின் போது, வட கொரியத் தலைவர் முதல் முறையாக தனது மகளை வெளியுலகத்திற்கு அறிமுகப்படுத்தினார். அந்த ஏவுகணை வெற்றிகரமாக ஏவப்பட்ட பாராட்டு நிகழ்விலும் கலந்து கொண்டுள்ளார். (அ)

# 84 நாடுகளின் வட்ஸ்அப் பயனர்களின் இலக்கங்கள் இணையத்தில் விற்பனை

## வெளியானது அதிர்ச்சி தகவல்

உலக அளவில் 2.20 பில்லியனுக்கும் அதிகமானோர் பயன்படுத்தக்கூடிய சமூக வலைத்தளங்களில் ஒன்றாக வட்ஸ் அப் உள்ளது. குறுஞ்செய்தி அனுப்புவது மாத்திரம் இல்லாமல், புகைப்படங்கள், வீடியோக்கள், கோப்புகள் என பல வசதிகளை வட்ஸ்அப் தனது பயனர்களுக்கு வழங்கி வருகிறது.

இதனால், வட்ஸ் அப் பயன்படுத்துவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள அதிகரித்துக் கொண்டே வருகிறது.


அதே நேரத்தில் வட்ஸ்அப்பில் பயனர்களின் தரவுகள் குறித்த பாதுகாப்பின்மை அச்சமும் நிலவி வருகிறது. இந்த நிலையில் உலகில் மிகப்பெரிய ஹெக்கர்களின் தகவல் திருட்டில் கிட்டத்தட்ட 50 கோடி வட்ஸ்அப் பயனர்களின் தொலைபேசி எண்கள் திருடப்பட்டு இணையத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக அதிர்ச்சி அறிக்கை வெளியாகியுள்ளது.

சைபர்நியூஸ் அறிக்கையின்படி ஒரு ஹெக்கர் வெளியிட்டுள்ள விளம்பரத்தில், 2022 தரவுகளின் அடிப்படையிலான சுமார் 48.7 கோடி வட்ஸ்அப் பயனர் தொலைபேசி எண்கள் விற்பனைக்கு தயாராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. இந்த தரவுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து, எகிப்து, இத்தாலி, சவுதி அரேபியா மற்றும் இந்தியா உட்பட 84 நாடுகளைச் சேர்ந்த வட்ஸ்அப் பயனர்களின் தொலைபேசி எண்கள் உள்ளன.

அதில் 32 அமெரிக்க மில்லியன் மக்களின் தரவுத்தொகுப்பை 7,000 டொலருக்கு (சுமார்.5,71,690 இந்திய ரூபா) விற்பனை செய்வதாகத் அந்த ஹெக்கர் தெரிவித்துள்ளார். தற்போது வரை சைபர் நியூஸ் அறிக்கைக்கு மெட்டா நிறுவனம் எந்த விளக்கத்தையும் அளிக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(அ)

# பிரேசில் பள்ளியில் துப்பாக்கி சூடு! மூன்று பேர் பலி! 11 பேர் படுகாயம்!!

பிரேசிலியா, நவ. 28



பிரேசிலில் உள்ள இரண்டு பள்ளிகளில், மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மூவர் பலியாகினர். 11 பேர் படுகாயமடைந்தனர்.

தென் அமெரிக்க நாடான பிரேசிலின் எஸ்பிரிடோ சான்டோ மாகாணத்தில் உள்ள இரண்டு பள்ளிகளில் நேற்று துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

இது குறித்து, இந்த மாகாணத்தின் பாதுகாப்பு செயலர் கூறியதாவது:

இந்த மாகாணத்தின் அராக்ரஸ் என்ற நகரத்தில் இரண்டு தனியார் ஆரம்பப்பள்ளிகள் உள்ளன.

இங்கு நுழைந்த மர்ம நபர் கண்மூடித்தனமாக சுட்டதில் இரு பள்ளிகளையும் சேர்ந்த மூன்று பேர் உயிரிழந்தனர்.

இதில், இருவர் ஆசிரியர்கள், ஒருவர் மாணவர். மேலும் ஒன்பது ஆசிரியர்கள் உட்பட 11 பேர் படுகாயமடைந்தனர். மர்ம நபர் குண்டு துளைக்காத ஆடை அணிந்திருப்பது அங்குள்ள கண்காணிப்புக் கமராவில் பதிவாகி உள்ளது-என்றார். (அ)

# மன அழுத்தத்துக்குள்ளானார் சுகாதார அமைச்சர் கெஹலிய

கொழும்பு, நவ. 28

**தொடர்ச்சியான தொலைபேசி அழைப்புக்களால் சுகாதாரத்துறை அமைச்சரான கெஹலிய ரம்புக்வெல நித்திரையின்றி மன அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளதாக சிங்கள வார ஏடொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளியாகிய அந்த வார இறுதி ஏட்டின் அரசியல் பத்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அண்மைக்காலமாக கடுமையான மன உளைச்சலுக்கு உள்ளாகி வருவதாகவும், இரவில் தூங்குவதற்காக தூக்க மாத்திரைகளை உட்கொள்வதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடுமையான மன அழுத்தத்தில் அவர் இருப்பதாகவும், இரவில் தூங்குவதற்காக தூக்க மாத்திரை அருந்துவதாகவும் நெருங்கிய நண்பர்கள் சிலரிடம் அவர் தெரிவித்ததன் மூலம் இது தெரியவந்துள்ளது.

இந்த நிலைமைக்கு காரணம், அவருக்கும் அவரது அலுவலக தொலைபேசிக்கும் காலையில் இருந்து இரவு வரை தொடர்ச்சியான அழைப்புக்கள் வருவதனால் தூக்கம் வரவில்லை என்று அவருக்கு நெருக்கமானவர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முழு சுகாதார சேவையின் நெருக்கடி பற்றிய விசாரணைகள். மருந்து தட்டுப்பாடு, பணியாளர் முரண்பாடுகள், மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் உரிய சேவை கிடைக்காமை, சுகாதார சேவையில் ஏற்பட்டுள்ள கடும் நெருக்கடி என்பனவே இந்த அழுத்தத்திற்கு காரணம் என்று அவர் தெரிவித்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



## வலி.கிழக்கு பிரதேச சபையில் மாவீரர்களுக்கு நேற்று அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 28

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தை வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையிடம் ஒப்படைத்து எமது மக்களின் நினைவேந்தும் உரிமைக்கு அரசாங்கம் இடமளிக்கவேண்டும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் போரில் ஆகுதியாகிய மறவர்களுக்கு நினைவஞ்சலிச் சுடரை ஏற்றிய பின் கருத்துரைக்கும்போதே இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்ட சடலங்களைக்கூட கிளறி எறிந்து இனவெறியைத் தீர்க்கவேண்டும் என்ற எண்ணம் இலங்கையின் அரச கட்டமைப்பில் வேரூண்டி இருக்கையில் நாடு முன்னேறிச் செல்வதற்கே இடமில்லை என்றும் தெரிவித்தார்.

உலக அளவில் எதிரியாக இருந்த போதும் போரில் கொல்லப்பட்டவர்களுக்கு கௌரவமளித்து தூபிகளை அமைத்துள்ள போதும் இன்றும் கோப்பாய் உள்ளட்ட பல துயிலும் இல்லங்கள் இராணுவ முகாம்களாக உள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# நந்திக்கடலில் அஞ்சலி



முல்லைத்தீவு, நவ..28

தாயக விடுதலைக்காக உயிர்நீத்த மாவீரர்களுக்காக முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று நந்திக்கடலில் மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.

மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

”எங்கள் பெருமைமிகு வரலாறின் சோகமான இறுதிக் காட்சிகளின் மௌனமான சாட்சியே இந்த நந்திக்கடல்.

ஏராளமான எங்கள் உறவுகளின் கண்ணீரும், செந்நீரும் கலந்துள்ள இந்தக் கடலன்னையை வணங்கி, தாயக விடுதலைக்காக உயிர்நீத்த எங்கள் மாவீரர் செல்வங்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தியுள்ளேன்” - என்றார். (அ)

## வடக்கு ஆளுநர் ஜீவன் இந்தியாவிற்கு விஜயம்

யாழ்ப்பாணம், நவ. 28

வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தியாவுக்கு பயணமானார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இளம் தொழில் முனைவோர் பங்குபற்றும் மாநாடு ஒன்றிற்காகவே அவர் இந்தியா பயணமானார்.

மதுரையில் நடக்கும் குறித்த மாநாடு இரு தினங்கள் இடம்பெறவுள்ளதாக ஆளுநர் செயலகம் குறிப்பிட்டுள்ளது. (அ)

## சில அமைச்சுக்களின் பட்ஜெட்டை தோற்கடிப்பதற்கு பஸில் திட்டம்!

கொழும்பு, நவ..28

முழு வரவு-செலவுத் திட்டத்தையும் தோற்கடிக்காமல் பொதுஜன பெரமுன கட்சியையும் பொருட்படுத்தாது, செயற்படும் ஒரு சில அமைச்சர்களின் வரவு-செலவுத் திட்டத்தை தோற்கடிக்க திட்டங்களை பஸில் ராஜபக்ஷ தயாரித்துள்ளார் என கூறப்படுகின்றது.

அந்த அமைச்சர்களின் பெயர்களுடன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சிறப்பு செய்தியொன்றை இடுவதற்கும் பஸில் நடவடிக்கை எடுத்தார். அங்கு பரிமாறப்பட்ட வட்ஸ்அப் செய்திகளில் குறிப்பாக மூன்று அமைச்சர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

நிமல் சிறிபால டி சில்வா, விஜயதாச ராஜபக்ஷ மற்றும் நசீர் அஹமட் ஆகியோரே அந்த அமைச்சர்கள் ஆவர். பொதுஜன பெரமுன உறுப்பினர்களை அவர்கள் பொருட்படுத்துவதில்லை எனவும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சாட்டியுள்ளதுடன், வரவு-செலவுத் திட்டத்தை தோற்கடிக்க தயார் என்று பல உறுப்பினர்கள் வட்ஸ்அப்பில் எழுதியுள்ளனர். (அ)

## துறைமுகத்தில் தேங்கியுள்ள பொருட்கள் விடுவிக்கப்படும்

கொழும்பு, நவ. 28

கொழும்பு துறைமுகத்தில் கடந்த 10 வருடங்களாக பல்வேறு சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் காரணமாக சேமித்து வைக்கப்பட்டுள்ள பொருட்களை இரண்டு மாதங்களுக்குள் விடுவிக்குமாறு துறைமுக அதிகார சபை மற்றும் சுங்க திணைக்களத்துக்கு துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பணிப்புரை விடுத்துள்ளார்.

கொழும்புத் துறைமுகத்தில் உள்ள 108 கொள்கலன்கள் மற்றும் களஞ்சியசாலைகளை பார்வையிட்ட பின்னர் அமைச்சர் மேற்படி அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். (அ)

## தந்தையை தடியால் தாக்கி கொலை செய்த மகன் கைது

கொழும்பு, நவ. 28

பதுளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெளஸ்வத்தை பகுதியில் தனது தந்தையை தடியால் அடித்துக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் அவரது மகன் கைது செய்யப்பட்டார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் பதுளை வெளஸ்வத்தை பிரதேசத்தை சேர்ந்த 60 வயதுடையவராவார்.

கொல்லப்பட்டவரின் 34 வயதுடைய மகனே இந்தக் கொலையை செய்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

தடியால் தாக்க வந்தபோது தந்தை வீட்டினுள் சென்று கதவை மூடிக்கொண்ட நிலையில் சந்தேக நபர் கதவை உடைத்து உள்ளே நுழைந்து தந்தையை தாக்கியுள்ளார்.

சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பதுளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் நெற் THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும்
யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN NEWS
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225

# ஜனவரியிலேயேதான் புதிய அமைச்சரவை?

கொழும்பு, நவ. 28

எதிர்வரும் டிசெம்பர் 8 ஆம் நாள் புதிய அமைச்சரவை நியமிக்கப்படவேண்டும் என்று நாடு திரும்பிய பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ கேட்டுக்கொண்டதாக சிங்கள வார ஏடொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளியான வார இறுதி ஏட்டின் அரசியல் பத்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பிய அன்றிரவே தனக்கு விசுவாசமான பல பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடலை நடத்தியுள்ளதுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் குறுகிய நேர சந்திப்பு நடத்தியுள்ளதாக அதிகாரபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு வாக்கெடுப்பு நடைபெறும் டிசெம்பர் 8 ஆம் நாள் புதிய அமைச்சரவையை நியமிக்கவேண்டும் என்று ரணிலுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகார பூர்வமற்ற வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

ஆனால், அமைச்சரவையை மாற்றியமைப்பதற்கான நேரம் இதுவல்ல என்றும், எதிர்வரும் ஜனவரி மாதம் அதனைச் செய்ய முடியும் என்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதிலாக இருந்தது.

இவ்வாறு தெரிவித்து, அமைச்சரவை மாற்றத்தை ஜனாதிபதி ஒத்திவைத்துள்ளதாக அதிகாரபூர்வமற்ற செய்திகள் மூலம் தெரியவந்துள்ளது.

ஆனால், பஸில் தனது பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு முன்னிலையில் இவ்வாறு தெரிவித்ததாக இதுவரை வெளிவரவில்லை. அவ்வாறு தெரிவித்திருந்தால் தமக்கு அது பாதகமாக அமையும் என்று அவர் எண்ணியிருக்க வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பேராயர் பதவியில் நீடிக்கிறார் மல்கம்?

## கோட்டாவுக்கு குடைச்சல் கொடுக்க

கொழும்பு, நவ. 28

ஈஸ்டர் தாக்குதல் விசாரணையை தொடர்ந்து முன்னெடுக்கும் வகையில் பேராயர் மல்கம் றஞ்சித் ஆண்டகையின் பதவியை நீடிக்குமாறு வத்திக்கானுக்கு பல உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.



இது தொடர்பாக நேற்று முன் தினம் சனிக்கிழமை வெளியான வார ஏட்டின் அரசியல் பத்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்று மூன்று ஆண்டுகள் ஆகின்றன. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணையை மறைக்க அரசியல்வாதிகள் முயற்சிப்பதாக குற்றம் சுமத்தப்பட்ட நிலையில், ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் நீதி வழங்குவதற்காக பெரும் போராட்டத்தை முன்னெடுத்து வருபவர் பேராயர் மல்கம் றஞ்சித் ஆண்டகை.

இதற்கிடையில், கடந்த வாரம் பேராயர் அவர்கள் தனது 75 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

வத்திக்கானில் 75 வயதுக்குப் பின்னர் பேராயர்கள் ஓய்வு பெறுவது பொதுவான மரபு. அதன்படி, பாரம்பரியத்தை பின்பற்றி, 75 ஆவது பிறந்த நாளுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னதாக, இது தொடர்பாக வத்திக்கானுக்கு கர்தினால்கள் அறிவித்திருந்தனர். அத்தகைய அறிவிப்புக்கு இரண்டு வாரங்களுக்குள் பதில் கடிதம் வத்திக்கானில் இருந்து பெறப்படுவதும் பெரும்பாலும் அடுத்த பேராயர்களின் நியமனமும் அதே நேரத்தில் செய்யப்படுவதும் வழமை.

எவ்வாறாயினும், இந்த கடிதத்தை அனுப்பியதன் மூலம், ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதியை அடைவதற்காக கர்தினால் பாரிய போராட்டத்தை தொடர்ந்து வருவதால் அந்த போரை முடிக்க அவருக்கு இன்னும் சிறிது கால அவகாசம் வழங்கப்படவேண்டும் என்றும் பல உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அமைப்புக்கள் வத்திக்கானிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இந்த வேண்டு கோளை வத்திக்கான் பரிசீலிக்க முடிவு செய் தால், கர்தினால்களின் சேவையை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக் கும் திறன் பாப்பரசருக்கு உள்ளது. எவ்வாறாயி னும், இது தொடர்பான கடி தம் எதிர்வரும் ஜனவரி மாதத் தின் நடுப்பகுதியில் கர்தினால்களுக்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் பின்னணியில், கடந்த வாரம் கர்தினால் ஜேர்மனிக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். ஏழை, எளியோருக்கு தேவாலயம் ஊடாக வழங்கி வரும் உதவிகளை தொடரத் தேவையான நிதியை பெற்றுக் கொள்வதற்காக அவர் அங்கு சென்றுள்ளார். இந்த பயணத்தின் பின்னர், கர்தினால் வத்திக்கானுக்குச் செல்வதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன- என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பிரபல பெண்கள் மருத்துவமனைக்கு ரூ.170 இலட்சம் மின்கட்டண நிலுவை!

## உடன் செலுத்தாவிட்டால் மின் துண்டிப்பு

கொழும்பு, நவ. 28

170 இலட்சம் ரூபா மின்சார கட்டணத்தை உடனடியாக செலுத்தாதுவிடின் முன்னறிவிப்பின்றி மின்சார இணைப்பு துண்டிக்கப்படும் என்று கோட்டை வீதியில் உள்ள பெண்கள் மருத்துவனைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒகஸ்ட் மாதம் தொடக்கம் மின்சாரக் கட்டணத்தை செலுத்த சுகாதார அமைச்சுக்கு எவ்வித ஏற்பாடும் கிடைக்காததால் பல மாதங்களாக மின்சார கட்டணம் செலுத்தப்படவில்லை என்று மருத்துவமனையின் பேச்சாளர் தெரிவித்தார்.

பணியாளர்களின் சம்பளம் செலுத்தப் பட்ட பின்னர் மின்சார கட்டணத்திற்கான பணத்தை வழங்குவதாக சுகாதார அமைச்சு உறுதியளித்துள்ளதாகவும், பணியாளர்களின் சம்பளம் கடந்த 25 ஆம் திகதி வழங்கப்பட்டதால், மின்சார கட்டணத்திற்கான பணம் அடுத்த வாரத்துக்குள் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் பேச்சாளர் கூறினார்.

எவ்வாறாயினும், அடுத்த வாரத்துக்குள் மின்சார கட்டணத்தைச் செலுத்தாது விட்டால், கோட்டை வீதியில் உள்ள பெண்கள் மருத்துவமனையின் மின்சார இணைப்பு துண்டிக்கப்படும் என்று பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# குறிப்பிட்ட காலத்துக்குள் பட்டம் பெறாத பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆப்பு!

கொழும்பு, நவ. 27

குறித்த காலத்திற்குள் பட்டம் பெறாத மாணவர்களை பல்கலைக்கழகங்களில் இருந்து நீக்குவது தொடர்பான சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் கொண்டு வர கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கல்வி கற்பதனை விட அரசியல் பணியை மேற்கொள்வதே முக்கியம் என நினைத்து மாணவர்கள் சிலர் 9 முதல் 10 வருடங்கள் பல்கலைக்கழக விடுதிகளில் தங்கி இருப்பதாக கிடைத்த தகவலின் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

பரீட்சைக்குத் தோற்றாமல் நீண்டகாலமாக பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்கள் குறித்த கணக்கெடுப்பை குறித்த காலத்துக்குள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கு பல்கலைக்கழக வேந்தர்களின் ஆதரவும் கோரப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

பல்கலைக்கழக விடுதிகளில் இவ்வாறு தொடர்ந்து தங்கும் மாணவர்கள் அதனை விட்டு விலகாமல் தொடர்ந்து தங்கியிருப்பது 21ஆம் நூற்றாண்டின் ஜனநாயகத்துக்கு சற்றும் பொருந்தாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மாணவர்கள் நீண்ட காலமாக பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியிருப்பதால் புதிய மாணவர்களுக்கு விடுதி வசதிகள் கிடைக்காமல் போவதுடன் புதிய மாணவர்களைத் துன்புறுத்தும் சம்பவங்களும் இடம்பெறுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போதைய பல்கலைக்கழக ஆணைக்குழுச் சட்டத்தில் குறிப்பிட்ட நேரத்துக்குள் பரீட்சைகளை நடத்திவிட்டு பல்கலைக்கழகங்களை விட்டு வெளியேறவேண்டும் என்ற சட்டம் இல்லாததால் பல்கலைக்கழகங்களுக்குள் நுழையும் மாணவர்களை வெளியேற்றுவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். எவ்வாறாயினும், புதிய சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட பின்னர் பிரச்னைக்கு தீர்வு காண முடியும் என அவர் குறிப்பிட்டார்.

சுகவீனம் அல்லது வேறு ஏதேனும் தனிப்பட்ட காரணங்களால் குறிப்பிட்ட நேரத்திற்குள் பரீட்சைக்குத் தோற்ற முடியாமல் போனால் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு மேலும் 50 வீத கால அவகாசம் வழங்கப்படும். இந்த புதிய சட்டம் திறமையை வழங்கும் என இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

# உணவுப் பொருட்களின் விலை உயர்வதைத் தவிர்க்கமுடியாது

கொழும்பு, நவ. 28

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதிக்காக வங்கிகள் டொலர்களை விடுவிக்காதுவிட்டால், பண்டிகைக் காலத்தில் அவற்றின் விலைகள் உயர்வதைத் தவிர்க்க முடியாது என்று அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர் சங்கத்தின் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியான சிங்கள வார ஏட்டுக்கு அவர் வழங்கிய நேர்காணலில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உருளைக்கிழங்கு, வெங்காயம், பருப்பு, உலர் பழங்கள் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை, அவற்றை இறக்குமதி செய்யும் அந்த அந்த நாடுகளின் விற்பனை விலையை வைத்து நிர்ணயம் செய்யப்படுவதால், சிலவற்றின் உற்பத்தி பற்றாக்குறையால் தட்டுப்பாடு நிலவுகின்றது.

பண்டிகைக் காலங்களில்



இந்த உணவுப் பொருட்களின் தேவை அதிகரிப்பதும் விலை உயரும். நாட்டில் தற்போதுள்ள இறக்குமதி வரிகள் மற்றும் வரிகளும் உணவுப் பொருட்களின் விலையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. அவற்றின் வரிகள் அதிகரிக்கப்பட்டால், அதுவும் விலை அதிகரிப்புக்கு வழி வகுக்கும்.

பொருட்களின் விலை எமது கைகளில் இல்லை. அரசாங்கத்திடம் நிலையான வரிக் கொள்கை இல்லை. அவ்வப்போது வர்த்தமானி மூலம் வரி திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதால் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான நிலையான விலையை பேணுவது சிரமமாக உள்ளது-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu



# மரடோனாவின் சாதனையை சமன் செய்தார் மெஸ்ஸி!

22ஆவது உலகக்கிண்ண உதைபந்து தொடரில் நேற்று முன் தினம் நள்ளிரவில் லுசைல் மைதானத்தில் இடம்பெற்ற 'சி' பிரிவு போட்டி ஒன்றில் ஆர்ஜென்ரீனா மற்றும் மெக்சிக்கோ அணிகள் மோதின.

பரபரப்பாக தொடங்கிய இந்த போட்டியில் முதல் பாதியில் எந்த அணியினரும் கோல் எதுவும் அடிக்கவில்லை. இதனால் இரண்டாம் பாதி ஆட்டம் அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. அப்போது ஆர்ஜென்ரீனா அணியின் மெஸ்ஸி ஆட்டத்தின் 64 வது நிமிடத்தில் கோல் அடித்து அசத்தினார்.

இதனையடுத்து போட்டியின் 87ஆவது நிமிடத்தில் அர்ஜென்ரீனா அணியின் பெர்னான்டெஸ், தனது அணிக்காக இரண்டாவது கோலை அடித்து அசத்தினார். இறுதியில் ஆர்ஜென்ரீனா அணி 2-0 என்ற கோல் கணக்கில் அதிரடி வெற்றியை பதிவு செய்தது.

இந்த போட்டியில் கோல் அடித்ததன் மூலம் மெஸ்ஸி உலகக்கிண்ண வரலாற்றில் தனது 8ஆவது கோலை பதிவு செய்தார். இதன் மூலம் உலகக்கிண்ணத்தில் ஆர்ஜென்ரீனா அணிக்காக அதிக கோல்கள் அடித்த வீரர்கள் பட்டியலில் உதைபந்து ஜாம்பவான் டியாகோ மரடோனாவுடன் மெஸ்ஸி 2ஆவது இடத்தை பகிர்ந்துள்ளார். இந்த பட்டியலில் ஆர்ஜென்ரீனா வீரர் கேப்ரியல் பாடிஸ்டுடா 10 கோல்கள் அடித்து முதல் இடத்தில் உள்ளார். (அ)

# ஜப்பானை வீழ்த்தியது கோஸ்டாரிக்கா



கட்டார் உலகக் கோப்பை குழு ஈ பிரிவில் நேற்று நடந்த ஆட்டத்தில் கோஸ்டாரிக்கா அணி ஜப்பானை 1-0 என வீழ்த்தியது.

குழு ஈ பிரிவில் இப்பொழுது ஸ்பெயின், கோஸ்டாரிகா, யப்பான் அணிகள் தலா 3 புள்ளிகளை பெற்றுள்ளன.

போட்டியின் இரண்டாவது பாதியில் கோஸ்டாரிகாவின் கீஷர் புல்லர் கோலடித்தார்.

முதல் ஆட்டத்தில், ஸ்பெயினிடம் 7-0 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்த கோஸ்டாரிகா,நொக் அவுட் சுற்று பந்தயத்தில் தன்னை தக்க வைத்துள்ளது.

இதேவேளை, முதலாவது ஆட்டத்தில் ஜேர்மனியை வீழ்த்திய யப்பானிற்கு இது அதிர்ச்சித் தோல்வி.

குழு ஈ பிரிவில் ஸ்பெயினும், ஜேர்மனியும் தலா ஒரு போட்டியில் முடியுள்ளன. ஜப்பான், கோஸ்டாரிக்கா 2 போட்டிகளில் ஆடியுள்ளன. ஜப்பான் அடுத்த ஆட்டத்தில் ஸ்பெயினை எதிர்கொள்கிறது. கோஸ்டாரிக்கா ஜேர்மனியை எதிர்கொள்கிறது.

# உலகக்கிண்ணத்தில் மற்றொரு அதிர்ச்சி! பெல்ஜியத்தை வீழ்த்தியது மொராக்கோ!!



பிபா உலகக்கிண்ணத்தை வெல்லக் கூடிய அணிகளில் ஒன்றாகவும், தரவரிசையில் 2ஆம் இடத்தில் உள்ளதுமான பெல்ஜியம் அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தது, தரவரிசையில் 22ஆவது இடத்திலுள்ள மொராக்கோ.

நேற்று நடந்த குழு எவ் ஆட்டத்தில் பெல்ஜியத்தை 2-0 என மொராக்கோ தோற்கடித்தது. இந்த கால்பந்து தொடரில் நடக்கும் அதிர்ச்சி சம்பவங்களில் ஒன்றாக இது அமைந்துள்ளது.

இந்த வெற்றியின் மூலம் குழு எவ் பிரிவில் இப்போதைக்கு மொராக்கோ முதலிடம் பிடித்துள்ளது.

அதேவேளை, பெல்ஜியத்தின் அடுத்த சுற்று வாய்ப்பு சிக்கலாகியுள்ளது.

மொராக்கோவின் அப்தெல்ஹமிட் சபிரி களமிறக்கப்பட்ட 5வது நிமிடத்தில்- ஆட்டத்தின் 73ஆவது நிமிடத்தில் கிடைத்த ஃப்ரீ-கிக்கை கோலாக்கினார். மேலதிக நேரத்தில் அபுக்லால் ஒரு கோலடித்தார்.

அடுத்த சுற்றிற்கு முன்னேறும் பிரகாசமான வாய்ப்பு மொராக்கோவிற்கு கிட்டியுள்ளது.

போட்டியின் பின்னர் பெல்ஜியம் வீரர் கெவின் டி புருய்ன் தனது நாட்டின் 'கோல்டன் ஜெனரேஷன்' என்று அழைக்கப்படுபவை முடிவுக்கு வந்துவிட்டதாக ஒப்புக்கொண்டார், குழு நிலைகளுக்கு முன்பே உலகக் கோப்பையை வெல்வதற்கான வாய்ப்புகள் முடிந்துவிடக்கூடும் என்றார்.

உலகக்கிண்ணத்தை வெல்வதற்கான வாய்ப்பு குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு- "அதற்கு வாய்ப்பில்லை, நாங்கள் மிகவும் வயதாகிவிட்டோம். எங்கள் வாய்ப்பு 2018 என்று நான் நினைக்கிறேன். எங்களிடம் ஒரு நல்ல குழு உள்ளது, ஆனால் அது வயதாகி வருகிறது" என்றார்.

# சேர்பியா அணியின் ஓய்வறையில் கொசோவாவை அவமதிக்கும் கொடி

பிபா உலகக் கிண்ணத் தொடரில் பிரேசிலுடனான ஆட்டத்தின் போது, சேர்பியாவின் ஓய்வறையில், கொசோவோவை தங்கள் நாட்டின் ஒரு பகுதியாகக் காட்டும் கொடி தொங்கவிடப்பட்ட விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



சேர்பியாவின் உதைபந்து சங்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளை பிபா தொடங்கியது என்று உதைபந்து நிர்வாகக் குழு கடந்த சனிக்கிழமை தெரிவித்துள்ளது.

சேர்பிய மொழியில் "நாங்கள் சரணடைய மாட்டோம்" என்ற செய்தியுடன் கூடிய கொடியின் படம், கொசோவோவின் கலாச்சாரம், இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சர் ஹஜ்ருல்லா செகுவால் பகிரப்பட்டபோது சமூக ஊடகங்களில் வைரலானது.

"செர்பியா ஓய்வறையில் இருந்து அவமானகரமான படங்கள், கொசோவாவை நோக்கி வெறுக்கத்தக்க, இனவெறி மற்றும் இனப்படுகொலை செய்திகளைக் காட்டுகின்றன, அதே நேரத்தில் பிபா உலகக் கிண்ண மேடையை சுரண்டுகின்றன" என்று செகு ருவிட்டரில் கூறினார்.

"கொசோவோ உதைபந்து கூட்டமைப்பு ஒரு முழு பிபா உறுப்பினர் என்பதைக் கருத்தில் கொண்டு பிபா இலிருந்து உறுதியான நடவடிக்கைகளை எதிர்பார்க்கிறோம்." என்றார்.

சேர்பியாவிடமிருந்து கொசோவா சுதந்திரம் அடைந்த 8 ஆண்டுகளின் பின்னர், 2016 இல் கொசோவா பிபா இல் உறுப்பினராகியது. இதை சேர்பியா எதிர்த்தது.

பிரேசில் மற்றும் செர்பியா போட்டியின்போது சேர்பியாவின் ஓய்வறையில் ஒரு கொடி காட்டப்பட்டதன் காரணமாக பிபா ஒழுக்காற்றுக் குழு சேர்பியாவின் உதைபந்து கூட்டமைப்பிற்கு எதிரான நடவடிக்கைகளைத் தொடங்கியது," என்று அது ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

**தேவை**

பிரபல தனியார் நிறுவனம் ஒன்றின் விளம்பர பகுதியில் பணியாற்றுவதற்கு ஆட்கள் தேவை.
(பெண் பிள்ளைகள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு :
077 311 9298, 075 313 2805

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.11.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## துயிலும்...

களுக்குத் துணிவுடன் துயிலும் இல்லங்களுக்கும், பொது இடங்களுக்கும் சென்று சுடரேற்றினர்.

தாயகத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களிலும், பொது இடங்களிலும் நேற்று மாலை 6:05 மணிக்கு நினைவு ஒலி எழுப்பப்பட்டது. 6:06 இற்கு அகவணக்கம் செலுத்தப்பட்டது. 6:07 இற்கு ஈகச்சுடர் ஏற்றப்பட்டது.

அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களிலும், பொது இடங்களிலும் சமநேரத்தில் சுடர்கள் கொழுந்து விட்டு எரிந்தன. அந்த ஒளி வெள்ளத்தின் மத்தியில் மக்கள் கண்ணீர் விட்டுக் கதறி அழுது தமது உறவுகளை நினைவுகூர்ந்தனர்.

யாழில் தீவகம் சாட்டி, கோப்பாய், கொடிகாமம், உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லங்களிலும், வல்வெட்டித்துறை தீருவில் திடல், நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவிடம் மற்றும் யாழ்.பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும் வணக்க நிகழ்வுகள் நடைபெற்றன.

அதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில், கனகபுரம் விசுவமடு, முழங்காவில் ஆகிய மாவீரர் துயிலுமில்லங்களிலும், மன்னார் மாவட்டத்தில், ஆட்காட்டிவெளி, பண்டிவிரிச்சான் ஆகிய மாவீரர் துயிலுமில்லங்களிலும் வணக்க நிகழ்வுகள் நடந்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தில், முள்ளியவளை, அளம்பில், ஆலங்குளம், வன்னிவிளாங்குளம், தேராவில் உள்ளிட்ட மாவீரர் துயிலுமில்லங்களிலும், வவுனியாவில் ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்லத்திலும், வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் ஒழுங்கமைப்பில் வவுனியா நகரசபை உள்ளக மண்டபத்திலும் வணக்க நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில், மாவடிமுன்மாரி, தரவை, வாகரை கண்டலடி ஆகிய மாவீர துயிலும் இல்லங்களிலும், தாண்டியடி சந்தியில் அமைக்கப்பட்டுள்ள பிரத்தியேக பகுதியிலும் வணக்க நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதோடு, அம்பாறையில் கஞ்சிகுடியாறு துயிலுமில்லத்திலும், திருகோணமலையில் ஆழங்குளம் மாவீரர் துயிலுமில்லத்திலும் வணக்க நிகழ்வுகள் இடம்பெற்றன. (அ)

## ரணில்...

மஹியங்கனையில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இராணுவத்தில் சீருடைகளை அணிந்துக்கொண்டிருப்பது நாட்டின் கிராமங்களில் உள்ள கஷ்டப்படும் குடும்பங்களின் பிள்ளைகளே அன்றி ரணில் விக்கிரமசிங்கவின் பிள்ளைகள் அல்லர் என்பதை அறிந்துக்கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் ஹிட்லரை போன்றவர் எனக் கூறுகிறார். அவர் பாராளுமன்றத்தில் எழுந்து காற்சட்டையை இரண்டு முறை தூக்கிக்கொண்டு நான் ஹிட்லர் போன்றவன் எனக்கூறும்போது சிரிப்பு வந்தது.

உண்மையில் ஹிட்லர் இறுதியில் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு இறந்தார். ஹிட்லர் உயிருடன் இருந்தால், மீண்டும் ஒரு தன்னை தானே சுட்டு இறந்திருப்பார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்ன கூற வருகிறார். மக்கள் எழுச்சி பெறக்கூடாது. அவசர காலச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவேன். மக்கள் எழுச்சி பெற்றால் இராணுவத்தை அழைப்பேன் எனக் கூறுகிறார். இராணுவத்தில் இருக்கும் 90 வீதமானவர்கள் எமது தாய், தந்தைகளின் பிள்ளைகள்.

பொலிஸாரும் அப்படியே. மஹியங்கனையை சேர்ந்த எத்தனை தாய், தந்தைமாரின் பிள்ளைகள் இராணுவத்தில் இருக்கின்றனர்?. தமக்கு ஏற்பட்டுள்ள தலைவிதியை அந்த பிள்ளைகள் அறிவார்கள்.

தமது தாய்,தந்தையின் வயல்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமையை அவர்கள் அறிவார்கள். அனைத்தையும் அறிந்தும் சீருடையை அணிந்து இருக்கின்றனர். அவர்கள் எமது பிள்ளைகள். எப்படி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உரியவர்கள் ஆவார்கள்-என்றார். (அ)

## ஜனாதிபதி...

சந்தித்து பேசியுள்ளார் என சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியுடனான இந்த சந்திப்பில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு விவகாரங்களுக்கான ஆலோசகர் சாகல ரட்நாயக்கவும் இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொராகொடவும் இந்த பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டனர்.

மேலும் 'றோ'வின் தலைவர் முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவையும் சந்தித்து பேசியுள்ளார். பஸில் ராஜபக்ஷ அமெரிக்காவில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கை திரும்பிய நிலையில் திங்கட்கிழமை இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த பேச்சுவார்த்தைகள் குறித்த விவரங்கள் முழுமையாக வெளியாகவில்லை.

எனினும் ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைகளின்போது றோ தலைவர் பல பாதுகாப்பு விடயங்கள் குறித்து பேசினார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் யுவான் வாங் 5 கப்பல் குறித்தும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதாகவும் நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்தும் துறைமுகங்கள் மற்றும் உட்கட்டமைப்புகள் குறித்தும் பேசியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்போது இலங்கை அரசாங்கம் இந்தியாவின் நலன்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் எதனையும் செய்யாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார் என்றும் இந்த விவரங்களை 'றோ'வின் தலைவர் இந்திய பிரதமரிடமும் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகரிடமும் தெரிவிப்பார் என்றும் அறியமுடிகின்றது. (அ)

## 4 இலட்சம்...

தாக பால் மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் லக்ஷ்மன் வீரசூரிய தெரிவித்தார்.

எனினும், இறக்குமதி செய்யப்பட்ட குறித்த பால் மா தொகையை சுங்கத் திணைக்களத்திலிருந்து விடுவிப்பதில் தாமதம் நிலவுவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை இலங்கை சுங்கத் திணைக்களம் நிராகரித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் குறித்த நிறுவனங்கள் அந்நிய செலாவணியை சட்ட விரோதமாக கையாளுகின்றமை குறித்து 02 மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட விசாரணை தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாக சுங்கத்தின் ஊடகப் பேச்சாளர் சுதந்த சில்வா தெரிவித்தார்.

இந்த விசாரணைகளை குழப்பும் வகையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களை சேர்ந்தவர்கள் பொய்யான தகவல்களை வெளியிடுவதாக அவர் கூறியுள்ளார். (அ)

# இலங்கையில் தரையிறங்கிய உலகின் மிகப்பெரிய விமானம்



கொழும்பு, நவ. 28

உலகின் மிகப்பெரிய விமானம் ஒன்று இலங்கையில் தரையிறங்கியது.

மிகப்பெரிய உக்ரைனிய சரக்கு விமானமான அன்டோனோவ் ஆன்-225 என்ற விமான வகையைச் சேர்ந்த, அன்ரனோவ் ஏ.என்.-124-100 என்ற சரக்கு விமானமே இவ்வாறு இலங்கையில் தரையிறக்கப்பட்டுள்ளது.

மத்தள சர்வதேச விமான நிலையில் நேற்று காலை 06.35 மணிக்கு குறித்த விமானம் தரையிறங்கியுள்ளது.

விமானத்திற்கு எரிபொருள் நிரப்புவதற்கும் விமான ஊழியர்கள் ஓய்வெடுத்து செல்லவும் இவ்வாறு விமானம் தரையிறக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து நேற்று இரவு இந்த விமானம் புறப்பட்டதாகவும், 24 பணியாளர்கள் இந்த விமானத்தில் இருப்பதாகவும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

மலேசியாவில் இருந்து பாகிஸ்தானின் கராச்சி செல்லும் வழியில் இவ் விமானம் மத்தள சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியது.

இந்த விமானம், அதிகபட்சமாக 640 தொன் எடையை சுமந்து செல்லும் திறன் கொண்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அரச நிறுவனங்களின் செலவுகளை கட்டுப்படுத்த கடுமையான தீர்மானம்

கொழும்பு, நவ. 28

அரச நிறுவனங்களின் செலவுகளை கட்டுப்படுத்த கடுமையான தீர்மானங்களை எடுக்க நேரிட்டுள்ளதாக தேசிய கொள்கை அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்த சுற்றுநிருபம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

நிகழ்வுகள், அங்குரார்ப்பண நிகழ்வுகள், கருத்தரங்குகள் உள்ளிட்ட அத்தியாவசியமில்லா அனைத்து விடயங்களுக்குமான செலவுகள் மட்டுப்படுத்தப்பட உள்ளன.

இந்த அறிவுறுத்தல்களை கடுமையாக பின்பற்றுமாறு அண்மையில் ஜனாதிபதியின் செயலாளரும் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், இந்த அறிவுறுத்தல்களின் பின்னரும் தேவையற்ற செலவுகள் அரச நிறுவனங்களில் இடம்பெறுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (அ)

# 'றோ' தலைவரை சந்திக்கவா நாட்டுக்கு திரும்பினார் பஸில்?

கொழும்பு, நவ. 28

கொழும்பு வந்த 'றோ' தலைவரைச் சந்திப்பதற்கா கவே அவசர அவசரமாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பியதாக சிங்கள ஏடொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியான அந்த வார இறுதி ஏட்டின் அரசியல் பத்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அவசரமாக நாடு திரும்பிய பஸில் ராஜபக்ஷ தொடர்பா கவே அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வரு கின்றது. எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கைக்கு வருகை தரவிருந்த பஸிலின் திடீர் வருகையின் இரகசியம் என்ன என்பது பலருக்கும் ஒரு கேள்வியாக உள்ளது.

இலங்கைக்கு வருகை தந்த 'றோ' தலைவரை சந்திப்பதற் காகவே அவர் வருகை வந்த தாக தெரிய வருகின்றது.

பஸில் ராஜபக்ஷவைத் தவிர, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மாத்திரமே அவர் சந்தித்துள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

பஸில் ராஜபக்ஷவின் திடீர் வருகையின் காரணங்கள் இந்த வெளிநாட்டு சிறப்புப் பிரதி நிதி மிகவும் முக்கியமான நபராக இருந்திருக்கவேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## உயிரிழந்த...

என்று ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலளிக்கும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

"இலங்கை ஜனநாயக நாடு. நினைவேந்தல் உரிமையை எவரும் தட்டிப் பறிக்க முடியாது. ஒவ்வொரு இனமும் இறந்த தமது உறவுகளை அமைதியாக நினைவேந்த முழு உரிமை உண்டு. இதைவிட வேறு எந்தக் கேள்வியும் தற்போதைய நிலைமையில் அவசியமற்றது" என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (அ)

## இவ்வருட...

ராட்சி மன்றத் தேர்தலை காலம் தாழ்த்துவதற்கு ஏதுவாகச் செயற்படுகின்றது என்ற குற்றச்சாட்டுகள் குறித்து தெளிவுபடுத்தும்போதே மகிந்த தேசப்பிரிய இதனை கூறினார்.

தேர்தல் ஆணைக்குழுவுக்கு மேல் பாராளுமன்றமும் நீதிமன்றமும் காணப்படுகின்றது. எனவே எல்லை நிர்ணய குழுவின் ஊடாக உள்ளூராட்சித் தேர்தலை காலம் தாழ்த்த முடியும் எனக் கூறுவதில் அர்த்தமில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் புதிய உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவேண்டும் எனில், பெப்ரவரி இறுதி வாரத்துக்குள் தேர்தல் நடத்தப்பட்டு, முடிவுகள் வெளியிடப்படவேண்டியது கட்டாயம் என்றும் மகிந்த தேசப்பிரிய சுட்டிக் காட்டினார். (அ)